# MIN ALAI
# மின் அலை

July2022 Volume : 10 Issue 07 Price Rs. 21.00/- Ann. Sub. Rs. 250/-








## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின்
## 54வது மாநில பொதுக்குழு கூட்டம் நாமக்கல்லில்
## 25,26 ஜூன் 2022 அன்று நடைபெற்றது.



**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
| --- | --- | --- |
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.G.கார்த்திகேயன் |

tnebes.org

# 2022 – ஆம் ஆண்டின் சங்கத்தின் மையப்பொறுப்பாளர்கள்



பொர்.A.அந்தோணிபடோவராஜ்
மாநிலத் தலைவர்
9443872166

பொர்.R.சுந்தர்ராஜ்
மாநிலத் துணைத் தலைவர் மின்னியல்
9443007521





பொர்.T.சிவகீர்த்தி
மாநிலத் துணைத் தலைவர் இயந்திரவியல்
9976529161

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்
9840956783





பொர்.G.கார்த்திகேயன்
பொதுப் பொருளாளர்
9841150516

பொர்.ரெமிங்டன்.V.ராயன்
செயலாளர் / அமைப்பு
9443463017





பொர்.C.ருத்ரகுமார்
செயலாளர் / நிர்வாகம்
9444906870

பொர்.R.சந்தோஷ் குமார்
செயலாளர் / வெளியீடு
9962719617





பொர்.P.பால்பாண்டி
செயலாளர் / சட்டம்
7708254757

பொர்.P.M.மாரியப்பன்
செயலாளர் / தலைமையகம்
9840968445





பொர்.R.சோமேஸ்வரன்
செயலாளர் / அலுவலகம்
7010636821

பொர்.S.பாலாஜி
செயலாளர் / வலைதளம்
9159424298





பொர்.R.தமிழ்ச்செல்வன்
செயலாளர் / சென்னை வடக்கு மண்டலம்
9841219297

பொர்.N.சத்தியநாராயணன்
செயலாளர் / சென்னை தெற்கு மண்டலம்
9500014054





tnebes.org

ஆசிரியர்
**பொர்.R.சந்தோஷ்குமார்**
9962719617

## ஆசிரியர் குழு

**பொர்.A.அந்தோணிபடோவராஜ்**
**பொர்.V.S.சம்பத்குமார்**
**பொர்.G.கார்த்திகேயன்**
**பொர்.N.R.செந்தில்**
**பொர்.R.K.நரசிம்மன்**
**பொர்.K.பிரபாகரன்**

Contents


| Page | Contents |
|---|---|
| 06 | கூட்டுகுழு கடிதம் |
| 14 | 54வது மாநில பொதுக்குழு |
| 17 | தொழில் உறவுகள் |
| 33 | கேள்வி பதில் |
| 36 | வார்த்தை கொலைகள் |
| 37 | பணி ஒய்வு |


**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9841150516**

# மின் அலை

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்**

**மலர் 10 ஜூலை 2022 இதழ் 07**

## பட்டு வேட்டி பற்றி கனவு

சாலை விதிகள் மீறப்படுமானால் சாலை விபத்துகள் அதிகமாகும், பள்ளி கல்லூரிகளில் விதிகள் மீறப்படுமானால் ஆசிரியர் – மாணவர் – சூழல் ஒழுங்கு கெடும், பேருந்து, ரயில் பயணங்களில் விதிகள் மீறப்படுமானல் பயணம் கேள்விக் குறியாகிவிடும்.

ஒரு நிறுவனத்தில் ஒப்பந்தம் மீறப்படுமானால் அவநம்பிக்கை மேலோங்கும், நிறுவனத்தில் வளர்ச்சி கெடும். எங்கெல்லாம் ஒப்பந்தங்கள் விதிகள் மீறப்படுகிறதோ அங்கெல்லாம் அமைதிகெடும், சட்டம் ஒழுங்கு சீர்கெடும். இதே நிலைதான் தற்போது மின்வாரியத்தின் கள நிலையாக உள்ளது.

மின்வாரியம் சிறப்புடன் இயங்க நிர்வாகத்துக்கும் ஊழியர்களுக்குமிடையே அவ்வப்போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் தற்போது மின்வாரியத்தால் ஒருதலைபட்சமாக மீறப்படுவது கவலையளிக்கிறது. அது மட்டுமல்லாமல் மின்வாரிய நிர்வாகம் பணியாளர்களை பொறியாளர்களை கொத்தடிமைகளாக உரிமையற்றவர்களாக உணர்ச்சியற்றவர்களாக நினைத்து தன் மனம் போன போக்கில் ஒப்பந்தங்களை மீறி பணிநிலைகளை மாற்றிவருவது சர்வாதிகார ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

கூர்ந்து கவனித்தால் ஒரு செய்தி விளங்கும்; மின்வாரிய பணியாளர்கள் பொறியாளர்கள் வாரியத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டார்கள். இது நீண்ட நாள் போக்கில் ஊழியர்களின் அமைதியின்மையை வெளிப்படுத்தும் போது விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும்.

மிகச் சாதாரணமாக செய்ய வேண்டிய விஷயம், காலிப் பணியிடங்களை நிரப்புவது ஆகும். இப்போது தொடங்கினாலே போதும், இரண்டு ஆண்டுகளில், முழுமையாக இல்லாவிடினும், ஓரளவு சமாளிக்கக்கூடிய நிலைக்கு பணிச்சுமையை இறக்கி விடலாம். இன்றைய நிலையில் “ பீலிபெய் சாகாடும்” என்ற நிலையில் மின் வாரிய



tnebes.org

பொறியாளர்களும் பணியாளர்களும் உள்ளார்கள். தரைமட்டாக சாயும் நிலைக்கு வந்துவிட்டனர் என்பதே உண்மை நிலவரமாகும்.

தமிழக அரசு ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கனவு கண்டது. மின்வாரியச் பொறியாளர்க்கும் பணியாளர்க்கும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு முன்பாகவே பல பல இடற்பாடுகளுக்கிடையே ஒரு இலட்சம் நனவாக்கியது. இந்த சாதனைக்காக மின் வாரிய ஊழியர்களுக்கு ஊக்க ஊதியம் வாழங்கியிருக்க வேண்டும். ஆனால் மின்வாரியம் எதிர் மறையாகத்தான் செயல்பட்டு வருகிறது, 01.12.2019 ல் ஏற்படுத்தப்பட வேண்டிய புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தையைக் கூட வாரியம் தொடங்க முன்வரவில்லை. மின் வாரியம் தன் ஊரியர்களை உரிமைகளற்ற உணர்ச்சிகளற்ற பிண்டங்களாக நினைத்து எதேச்சாதிகாரமான நடந்து வருகிறது BP No :2 நாள் 12.04.2022 ஆனது நிர்வாகத்தின் எதேச்சாதிகங போக்கிற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

பட்டுவேட்டி (ஊதிய உயர்வு) பற்றிய கனவில் மின்வாரிய ஊழியய் இருக்கும் போது கட்டியிருந்த கோவணமும் (BP : 2 வழியாக) களவாடப்பட்டது.


காரணம் இன்றி காரியமில்லை; கடந்த 20.07.2022 அன்று JAC அறிவித்த ‘‘காத்திருப்பு போராட்டம்’’ ஆனது மின்வாரியத்தின் நிலவும் அமைதியற்ற சூழலின் சிறிய வெளிப்படாகும். அறுவை சிகிச்சை தேவைப்படும் வரை முற்றவிடாமல் மருத்தினாலேயே குணப்படுத்துவதுதான் வாரிய நிர்வாகத்துக்கான முதிர்ச்சியாகும்.

மின்வாரியம் தன் பயண இலக்கை தவறவிட்டு விட்டது. JAC வைத்துள்ள கோரிக்கைகளை ஏற்று வாரியம் தன் பயணப்பாதையை மீட்டெடுக்கும் என நம்புகிறோம்,

## பொதுச் செயலாளர் கடிதம்

வணக்கம்

அன்பு பொறியாளர்களே.



நமது பொறியாளர் சங்கத்தின் 54 வது மாநில பொதுக்குழு நாமக்கல்லில் ஜூன் 25,26 ஆகிய தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. பொதுக்குழுவில் நான் மீண்டும் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். எனக்கு பொதுச் செயலாளராக பணி செய்ய மீண்டும் வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். பொதுக்குழுவில் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெற்று, தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளது.

வாரியத்தில் மண்டல அளவிலான சீர்திருத்தங்களை முன்வைத்து, திருவண்ணாமலை, கரூர், தஞ்சாவூர் என மூன்று புதிய விநியோக மண்டலங்களை உருவாக்கியதை தொடர்ந்து நமது சங்கத்திலும் நிர்வாக வசதிக்காக மூன்று செயலாளர் மண்டலம் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

காமதேனு நலதிதி திட்டம் (6) பொதுக்குழுவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சந்தா தொகையாக ரூ.10,050/– பணப்பயனாக ரூ.3,50,000/– (3000 உறுப்பினர்கள் இணைந்த பின்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல கிளைகளில் உறுப்பினர் சேர்க்கை உத்வேகத்தினை அளித்திடும் வகையில் உள்ளது. அனாலும் சில கிளைகளில் இன்னும் உறுப்பினர் சேர்க்கை துவங்கவில்லை. உறுப்பினர்கள் அனைவரும் இத்திட்டத்தில் சேருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சங்கத்தின் மின்அலை முகவரி மாற்றம் உள்ளிட்ட தரவுகளை அந்தந்த கிளைகளிலேயை செய்திடும் வண்ணம், இணையதளத்தில் புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டு, நமது சங்கத்தின் முன்னோடி பொர்.V.சந்திரசேகரன் அவர்களால் பொதுக்குழுவில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த நமது முக்கிய கோரிக்கையான 14 ஆண்டுகள் பதவி உயர்வு இல்லாமல் இளநிலை பொறியாளர் முதல் நிலையாக (இயந்திரவியல்) பணி முடித்த பொறியாளர்களுக்கு மின்னியலில் வழங்கப்பட்டது போன்றே உதவி செயற்பொறியாளர் சார்பு வழங்கிட 101 நபர்களுக்கான தகவல்கள் வாரியத்தால் கேட்கப்பட்டுள்ளது. உதவி



tnebes.org

செயற்பொறியாளர் சிவில் பதவி உயர்வுக்கும் தகுதிகான் பட்டியல் கேட்கப்பட்டுள்ளது. நீதிமன்ற தடை உத்தரவு நிலுவையில் உள்ளதால் இளநிலை பொறியாளர் முதல் நிலை இயந்திரவியல் பதவி உயர்வு தாமதமாகி வருகிறது. நீதிமன்ற தடை உத்தரவினை நீக்கிட பொறியாளர் சங்கம் முயற்சி எடுத்து வருகிறது. இளநிலை பொறியாளர் முதல் நிலை மின்னியல் பதவி உயர்வுக்கான தகவல்கள் இன்னும் பல வட்டங்களில் இருந்து தலைமையகத்துக்கு அனுப்பப்படாமல் உள்ளதால் பதவி உயர்வுக்கான நடவடிக்கைகள் இன்னும் இறுதி செய்ய முடியவில்லை.

இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை மின்னியல் பதவி உயர்வில் மூன்றாண்டுகள் அனுபவம் தேவை என்பதை இந்த பதவி உயர்வுக்கு தளர்த்திட எடுத்த நடவடிக்கைக்கு வாரிய கூட்டத்தில் அனுமதி அளிக்கப்படவில்லை. சங்கம் மீண்டும் அதற்கான முயற்சிகளை தொடர்ந்து வருகிறது. உதவி செயற் பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு இறுதி கட்டத்தினை எட்டியுள்ளது. விரைவில் DPC முடித்து பதவி உயர்வுகள் வழங்கப்படும். உதவி செயற் பொறியாளர் (இயந்திரவியல் மற்றும் சிவில்) பதவி உயர்வுக்கான தகவல்கள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படுவது இன்னும் முழுமையாகவில்லை. செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு நபர்களுக்கு 35 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நமது பொறியாளர் சங்கம் பல கட்டத்தில் பல போராட்டங்களை முன்னெடுத்து வென்று பெற்ற உள்முகத்தேர்வு இன்று ஒரு வாரிய உத்தரவின் மூலம் கேள்விக்குறியாகி உள்ளது. 07.06.2022 க்கு பிறகு பணிக்கு சேர்பவர்கள், மற்றும் 07.06.2022 ற்கு பிறகு படிப்பு முடிப்பவர்களுக்கு உள்முகத்தேர்வு அளிக்க வேண்டியது இல்லை என்று வாரிய உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. இது உதவி பொறியாளர் மட்டுமல்ல அது அனைத்து உள்முக தேர்வுகளையும் கேள்விக்குறியாகி உள்ளது. இதுகுறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுத்திட பொறியாளர் சங்கம் ஆலோசித்து வருகிறது.

அரசுத் துறையில் முதுநிலை பட்டம் படித்தவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒருமுறை மட்டும் வழங்கப்படும் ஊக்க தொகையைக்கூட வாரிய பணியாளர்களுக்கு தர வேண்டியது இல்லை என்ற முடிவினை வாரியம் எடுத்துள்ளது. ஏற்கனவே BP-2 மூலம் நமது சலுகைகளை பறித்துள்ள வாரியம், தற்பொழுது ஒவ்வொரு உத்தரவாக வெளியிட்டு பல சலுகைகளை பறித்து வருகிறது. நமது மின்வாரிய பணியாளர்கள், தொழிற்சங்கங்களின் மூலம் பல ஆண்டுகளாக, பல கட்ட போராட்டங்களை நடத்தி பெற்ற சலுகைகளை ஒவ்வொன்றாக பறித்து வருகின்றது வாரியம். இது பணியாளர்கள் மத்தியில் மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. திருச்சி, நெல்லை, மதுரை உள்ளிட்ட இயக்குதல் வட்டங்களில் துணை மின் நிலையங்களில் களப்பணியாளர் பதவிகள் அயல் பணி ஒப்படைப்பு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு தனியாருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது 21.12.2020 –ல் நாம் போராட்டம் நடத்தி ரத்து செய்ய வைத்த துணை மின் நிலைய அயல் பணி ஒப்படைப்பு மீண்டும் வேறு வடிவில் வந்துள்ளது. வாரியம் எந்தவித பதவிகளுக்கு அனுமதியும் அளிக்காமல், காலி பணியிடங்களை நிரப்பிட எந்தவித முயற்சி எடுக்காமல், அனைத்து பணிகளிலும் அயல் பணி ஒப்படைப்பு முறையினை புகுத்திட எண்ணம் கொண்டுள்ளதை மீண்டும் வெளிப்படுத்தி உள்ளது. வட சென்னை அனல் மின் உற்பத்தி நிலைய அலகு–3 ல் “End to End” அயல் பணி முறையில் ஒப்படைத்திட வாரியம் முடிவு செய்துள்ளது. வாரியத்தில் உள்ள அனல் மின் நிலையங்களில் உள்ள பதவிகளை குறைத்திட NPC ஆலோசனைகளை வாரியத்திற்கு அளித்துள்ளது. வாரியத்தின் தொழிலாளர் விரோத போக்கினை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை கைவிட வலியுறுத்தியும், காலிபணியிடங்கள் நிரப்புதல், புதிய பணியிடங்கள் அனுமதி, அயல் பணி ஒப்படைப்பு ரத்து, நிளி100–ன் படி முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்துதல், 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு உள்ளிட்ட 14 கோரிக்கைகள் மீதான அரசின் வாரியத்தின் கவனத்தை ஈர்த்திடும் விதமாகவும் 20.07.2022 அன்று மாநிலம் தழுவிய காத்திருப்பு போராட்டத்தை நடத்துவதென மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு முடிவு எடுத்து, அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முழு அளவில் தொடங்கி நடைபெற்று வந்தது.

தலைமை அலுவலகம் முதல் பிரிவு அலுவலகம் வரையிலான பணியாளர்களை சந்தித்து இப்போராட்டம் சிறப்பான வெற்றியை தேடித் தந்திடும் விதமாக அனைவரையும் போராட்ட களத்திற்கு ஆயத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வந்தது. அரசும் வாரியமும் இந்த போராட்டத்தின் தாக்கத்தினை உணர்ந்து, தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திட முடிவு



tnebes.org

செய்து, 20.07.2022 அன்று மின்துறை அமைச்சர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திட அழைப்பு விடுக்கப்பட்டது. அரசின் மீதும், வாரியத்தின் மீதும் நம்பிக்கை வைத்து 20.07.2022 அன்று நடைபெற இருந்த காத்திருப்பு போராட்டத்தினை ஒத்திவைப்பதாக கூட்டு நடவடிக்கை குழு முடிவு செய்தது.

பின்னர் 20.07.2022 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை தலைமை செயலகத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகள் அனைவரும் சந்தித்து நமது கோரிக்கைகளின் நியாயங்களை எடுத்துரைத்தனர். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் கோரிக்கைகளின் நியாயங்களை ஏற்றுக்கொண்டு, இவ்விஷயங்கள் குறித்து ஓரிருநாளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து, ஏற்றுக் கொள்ளக்கூடிய கோரிக்கைகள் குறித்து விரைவில் அறிவிப்பதாக தெரிவித்தார்கள்.

இந்த நேரடி நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற கள அளவில் சிறப்பாக செயல்பட்ட பொறுப்பாளர்களுக்கும், போராட்டத்திற்கு அழைத்தவுடன் தங்களை முழுவதுமாக தயார் செய்து கொண்டு பங்கேற்க காத்திருந்த பணியாளர்கள் அனைவருக்கும் பொறியாளர் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மின் உற்பத்தி நிலையங்களில் தொடங்கி விநியோகப் பிரிவுகள் வரை Additional Charge Allowance வழங்குவதில். தேவையற்ற. வாரிய உத்தரவுக்கு மாறாக. தணிக்கை துறையினர் தெரிவித்த ஆட்சேபனையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையினை மாற்றிட பொறியாளர் சங்கம் இரண்டு ஆண்டுகளாக வாரிய தலைவர். இயக்குனர் / விநியோகம், இயக்குனர் /மின் உற்பத்தி, வாரிய செயலாளர், ஆகியவருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வந்ததன் பயனாக, இன்று அனைத்து தணிக்கை ஆட்சேபனைகளையும் ரத்து செய்து ஒரு தெளிவான உத்தரவினை வாரியம் வழங்கி உள்ளது. இதற்காக வாரிய தலைவர், இயக்குனர் / விநியோகம், இயக்குனர் /மின் உற்பத்தி, வாரிய செயலாளர், செயலக கிளை அலுவலர்கள் உள்ளிட்டவர்களுக்கு பொறியாளர் சங்கத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாரியத்தில் டெண்டர் பவர்கள் குறித்த ஆணையில் சில திருத்தங்கள் தேவைப்படும் என பொறியாளர் சங்கம் வைத்த கோரிக்கையை ஏற்று டெண்டர் பவர் ஆணையில் for new services of agriculture and natural calamities என்ற வாசகத்தை நீக்கம் செய்து வாரிய ஆணை எண் 04 தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் RDSS Sheme உள்ளிட்ட பல பணிகளை குறித்த நேரத்திலும், சிறப்பாகவும் செய்து முடித்திட டெண்டர் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை பொறியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இது வரும் வாரிய கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று தெரிய வருகிறது. Imprest Close செய்வதை எளிமையாக்கும் பொருட்டு சில முன் வடிவுகளை வாரிய தலைவர் அவர்களுக்கு பொறியாளர் சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான உத்தரவுகள் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரியத்தில் போதுமான தரமான தளவாடங்கள் தொடர்ந்து கிடைப்பதில்லை என்பதை பொறியாளர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பிரிவு பணிகளில் உள்ள உறுப்பினர்கள் தமது பிரிவுகளுக்கு தேவையான தளவாடப் பொருட்களை அவ்வப்போது Intend மூலம் தமது மேலதிகாரிகளுக்கு தெரிவித்திட கேட்டு கொள்கிறேன்.

வாரியத்திலும் மின் துறையிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுள்ளது. நாம் இந்த மாற்றங்களை எதிர்கொள்ள நம்மை தயார் செய்து கொள்வது மிகவும் அவசியம். “fittest will only survive”. நமது பொறியாளர்களின் சிலர் இன்னும் தமது PAR போடுவதற்கு கூட மற்றவர்களை நம்பி இருக்கும் நிலை இருக்கிறது. இது முற்றிலும் மாற்றப்பட வேண்டும். இன்று அனைத்து பணிகளும் கணினி வழியில் செய்யவேண்டியது அவசியமாகின்றது. நாம் இதில் தனி கவனம் செலுத்தி, நம்மை மேம்படுத்திக் கொள்வது அவசியம். பொதுமக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. பொதுமக்களின் எதிர்பார்ப்பையும் அவர்களின் தேவையை சரி செய்து தருவதே நமது முக்கியமான பணி. இதனை செவ்வனே செய்து முடித்திட நாம் மேலும் நம்மை மேம்படுத்திக் கொள்வது அவசியம்.

நன்றி

**பொர்.V.S.சம்பத்குமார்**
பொதுச்செயலாளர்



tnebes.org

**தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு–– சென்னை.**

நாள் : 05.07.2022

பெறுநர் :

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

ஐயா, வணக்கம்.

பொருள் : மின்வாரிய பணியாளர்களின் தேங்கியுள்ள கோரிக்கைள் மீது – தீர்வு எட்டப்படாததால் – தங்களின் கவனத்தை ஈர்க்க – இயக்கம் – தொடர்பாக.

பார்வை : தொழிற் சங்க கூட்டு நடவடிக்கைக்குழு கடித நாள் 16.06.2022

மின்வாரிய பணியார்களின் கீழ்கண்ட கோரிக்கைகள் மீது தீர்வு காண வரியுறுத்தி பலமுறை தங்களிடமும் நேரில் பேசியும், கடிதம் கொடுத்தும் தீர்வு காணப்படவில்லை. கீழ்கண்ட கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் அனுப்பியுள்ளோம்.

1. மின்வாரிய பணியாளர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு பேச்சுவாத்தையை உடனடியாக துவக்கிட வேண்டும்.
2. மின்வாரிய ஆணை 2, நாள் 12.04.2022 – ஐ முழுமையாக ரத்து செய்திட வேண்டும்,
3. மின் வாரியத்தில் உள்ள 56,000 காலிப்பணி இடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
4. அரசு ஆணை 100–ன் தொடர்பாக தமிழக அரசின் உத்திரவாதத்துடன் கூடிய முத்தரப்பு ஒப்பந்தம் காணப்பட வேண்டும்.
5. மின்வாரியத்திற்கு சொந்தமான வட சென்னை அனல் மின் நிலையம் அலகு–3ன் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை முழுவதுமாக, அயல்பணி ஒப்படைப்பு முறையை (end to end Out sourcing) கைவிட வேண்டும்.
6. துணைமின் நிலையங்களில் அயல்பணி ஒப்படைப்பு முறையை (Out sourcing) கையாள உத்திரவிட்டிருக்கும் அனைத்து வாரிய ஆணைகளையும் திரும்பப் பெற்று உரிய பதவி அனுமதிகளை வழங்கிட வேண்டும்.
7. (Re-Deployment) முறையை கைவிட்டு பதவி உயர்வின் மூலம் பணி இடங்களை நிரப்பிட வேண்டும்.
8. மின்வாரியத்திற்கு சொந்தமான பலகோடி ரூபாய் மதிப்புள்ள தரவுகளை (IT Wing) தனியார் ஏஜன்சியிடம் ஒப்படைக்கக்கூடாது,
9. நிறுத்தி வைக்கப்பட்ட சரண்டர் விடுப்பையும் மற்றும் ஜனவரி 2022 முதல் வழங்க வேண்டிய பஞ்சப்படியையும் வழங்கிட வேண்டும்.
10. தரமான தளவாட பொருட்கள் தடையின்றி தொடர்ந்து வழங்கிட வேண்டும்.



tnebes.org

மேற்கண்ட கோரிக்கைளின் மீது மின்வாரிய நிர்வாகம் மற்றும் தமிழக அரசின் கவனத்தை ஈர்த்து தீர்வு காண்கின்ற வகையில் எதிர் வரும் 20.07.2022 அன்று அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் மின்வாரிய தலைமையகத்திலும் காத்திருப்பு போராட்டம் நடத்துவதென மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு முடியு செய்துள்ளதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

எனவே தொழில் அமைதியை நிலை நாட்ட தகுந்த தீர்வு காண்பீர்கள் என நம்புகிறோம்.

நன்றி
தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊரியர் மத்திய அமைப்பு (சிஐடியூ)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற்சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் (HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்



tnebes.org

**ABSTRACT**

Recruitment - Internal Selection - To follow the existing procedure for Internal Selection - Cut of Date - Prescribed - Orders - Issued.

ADMINISTRATIVE BRANCH

(Per.) FB TANCEDCO Proceeding No.5

Dated the 7th July 2022
Aani 23, Subakiruthu Varudam,
Thiruvalluvar Aandu 2053.

*****

Proceedings :

The Proposal for conducting internal selection by following the existing procedure until a policy decision has to be taken was placed before the Board of TANGEDCO Considering the huge number of vacancies in the initial level dategories. The TANGEDCO in its 107th Board Meeting held on 07.06.2022 has directed as follows :-

i. "Henceforth Internal selection shall not be allowed for new recruits and persons acquiring qualification from this date. The cut - off date for implementation of this policy shall be from 07.06.2022. Internal selection shall be considered for existing staff who have already acquired the qualification as per provisions of Service Regulations.

ii. Futher, qualification obtained through Open Universities/Correspondence Courses without studying 10th, +2 under regular stream as notified by the UGC, shall not be considered for appointment through internal selection."

2) Accordingly, it is hereby ordered that the internal selection shall be allowed to continue with the existing eligible employees who have already acquired the qualification prior to 07.06.2022 only as per provisions of Service Regulation No.94 vide (per.) FB TANGEDCO Proceedings No.3 (Secretariat Branch) Dated : 09.01.2015 it is also ordered that the qualifications obtained through Open Universities / Correspondence Courses without studying 10th, +2 Under regular stream as notified by the UGC, will not be considered for appointment through internal selection".

(BY ORDER OF THE BOARD OF TANGEDCO)

**A.MANIKKANNAN**
CHIEF ENGINEER /PERSONNEL (FAC)



tnebes.org

SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAI
144, ANNAI SALAI
CHANNAI - 2.

**Memorandum (Per.) No.39468/A17/A171/2022-4, Dated 18.07.2022**

Sub : Establishment - Additional charge arrangements in Thermal Power Stations - Measures on curtailing expenditure - Certain instructions issued - Sanction of Additional Charge Allowance - Objection raised by the Audit Parties - Instructions - Issued.

Ref : 1. Memo. (Per) No.79004/A18/A181/2012-2 (SB), dt. 08.05.2013
2. Memo. (Per) No.30051/A18/A181/2019-6 (SB), dt. 23.05.2019
3. Memo.No.45243/A18/A181/2019-1 (SB), dt.14.09.2020

*****

In continuation of the clarificatory orders issued in the reference second cited and in supersession of the orders issued in the reference third cited, the following instructions are issued to the competent authorities :

(i) In Thermal Power Stations, Additional Pay (Additional Charge Allowance) shall be granted to the officials holding additional Charge of the posts of Assistant Engineers/Assistant Executive Engineers / Senior Chemists in the following Divisions / Wing which are having different territorial jurisdictions and definitely independent :

> "Technical services, Boiler Maintenance, Turbine Maintenance, Mill Plant Maintenance, Common Auxiliaries, Coal Handling & Fire Fighting, Ash Handling Plant, Electrical Maintenance-I, Electrical Maintenance-II, Control & Instrumentation, Meters & Relays Testing, Civil Maintenance - II and Central maintenance Planning ( except those in Environment Monitoring & Training Sub-Divisions); and Chemical Wing (except those are in shift duties)";

(ii) The Objections raised by the Audit Parties on the Additional Charge arrangements made to th posts as stated in clause (I)be above, shall be dropped;

(iii) The Recovery Proceedings initiated against the Additional Charge allowances paid to the officials in Thermal Power Stations shall be dropped and the amount recovered from them, shall be released;

(iv) The pending bills of the Allowances for Additional charge Arrangements made already in the posts of AE/AEEs shall be processed.

2. While sanctioning the Additional Charge Allowance to the officials in Thermal Power Stations, the Chief Engineers of Thermal Power Stations shall certify that the responsibilities of the officials in the Additional Posts are not divisible and both the regular and additional posts are in different territorial jurisdiction.

3. The receipt of the Memorandum shall be acknowledged.

(**BY ORDER OF THE CHIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**



tnebes.org

**ABSTRACT**

Establihment - tangedco - Employees to follow proper dress code in Office Amendment to para 16.21 (iii) of Tamil Nadu Electricity Board Office Manual - Orders - Issued.

**SECRETARIAT BRANCH**

(Per.) FB TANGEDCO Proceedings No.17 — Dated 28th June 2022.
Aani-14
Thiruvalluvar Aandu 2053.
Read :-

1. G.O. (Ms) No,62 P&AR (A) Department dated 28.05.2019.
2. G.O. (Ms) No.67 P&AR (A) Department Dated 01.06.2019
3. Extract from the minutes of 107th Board meeting of TANGEDCO held on 07.06.2022

*****

**PROCEEDINGS :-**

The Dress Code prescribed in Para 16.21 (iii) of Tamil Nadu Electricity Board office manual is required to be modified on the lines to suit the present day circumstances and to maintain the decorum of the office.

2. In their orders first and second read above, the Government of Tamil Nadu have issued necessary amendments to the Secretariat office Manual in respect of Dress Code prescribed for the employees working in Secretariat.

3. The Dress Code prescribed in para 16.21 (iii) in Chapter XVI under the heading “OFFICE HOURS, LEAVE, ETC.” in the Tamil Nadu Electricity Board Office Manual read as follows :-

> “Other employees are at perfect liberty to wear, while on duty, whatever dress they like, provided it is in conformity with the ideas of decency prevalent in society”.

4. Of late, it is observed that some employees of TANGEDCO are not following the proper dress code of wearing formal attire while attending office scrupulously.

5. Based on the above orders of the Government, a proposal has been placed before the 107th Board meeting of TANGEDCO held on 07.06.2022 for issuing necessary amendment to para 16.21 (iii) of the Tamil Nadu Electricity Board Office Manual on the norms prescribed by the Government in respect of Dress Code.



tnebes.org

6. The Board of TANGEDCO has approved the above proposal. Accordingly, the following amendment be issued:-

**AMENDMENT**

In the Tamil Nadu Electricity Board Office Manual in para 16.21 (iii) in Chapter XVI under the heading “OFFICE HOURS, LEAVE, ETC.”, the following expression shall be substituted :-

> “All the employees of TANGEDCO/TANTRANSCO/TNED Ltd. are required to wear neat, clean, formal attire that is appropriate to the work place settings, so as to maintain the decorum of the Office, while in duty, like saree or salwar kameez or chudidhar with dupatta in the case of female employees and shirts with formal pants or veshti (dhoti) reflecting Tamil culture or any Indian traditional dress, in the case of male employees. Casual attire shall be avoided.
>
> In case of appearance before a Court or Tribunal or any other judicial forms, a male officer should wear a short buttoned up coat will full sleeves worn with trousers and if the officer prefers and open coat, he should invariably put on a tie as well and that the dress should be sober and subdued in colour and design. As for a female officer, she should wear a saree or salwar Kameez or chudidhar with dupatta of a sober colour”.

7. In order to maintain discipline, and decorum of office, all officers / Staff / Employees are directed to follow the dress code as mentioned above. Any violation of this order will be viewed seriously.

8. In order shall be implemented with immediate effect,

**(BY ORDER OF THE BOARD)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**



**75வது சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்**

அனைத்து பொறியாளர்களுக்கும்
தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர்
சங்கத்தின் சார்பாக
இனிய சுதந்திர தின
நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.



tnebes.org

**REMINDER**

SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAI,
144, ANNA SALAI,
CHENNAI - 2

Memorandum No.26137/A1/A11/2022-1, dated 08.07.2022.

Sub: Estt - TANGEDCO - Class - I Service - To Submit the Performance Assessment Report in the - Reiterated.

Ref: 1. Secretariat Branch Circular Memo. No.10900/A19/A192/2022-1, dated25.03.2022.

2. Secretariat Branch Memo.No.16997/A1/A11/2022-1, dated 11.05.2022.

*****

In the Memorandum first Cited, all the Chief Engineers, Suprintending Engineers wear directed to issue suitable instructions to the assistant Engineers, Assistant Executive Engineers, Executive Engineer to Submit their self assessment report through online PAR link: http://192.168.150.67:8080/cc/TNEBpar/ to the respective immediate superior officers with in ten days from the commencement of the performance Assessment period (i.e) on or before 10th April of every year and the reporting officers should make necessary assessment on the self assessment report submitted by their subordinate officers after proper scrutiny and to send their report as per the guidelines prescribed in the reference second cited on or before 30th April of ever year.

2. In the Memo. second cited, the above instructions were reiterated.

3. Now, it is come to notice that the said instruction has not been followed scrupulously, which caused delay in processing the panel and to assess the works of the officers.

4. Therefore, all the Chief Engineers, Superintending Engineers, are once again directed to follow the instructions scrupulously and to submit/upload the Performane Asessment Reports on or before 20.07.2022, without further delay.

5. This may be treated as “MOST URGENT”.

A.MANIKKANNAN
SECRETARY

ஒரு மனிதன் சௌகரியமாக, வசதியான கணங்களில் எங்கு நிற்கிறான் என்பதை வைத்து அல்லாமல் சிரமமான, சவாலான கணங்களில் அவன் எங்கு நிற்கிறான் என்பதை வைத்தே அவன் எடைபோடப் படுகிறான். சிரமம், சலிப்பு, இன்னல் ஆகியவை இருந்தும் நீங்கள் முன்னேறிச் செல்கின்ற போதுதான் நீங்கள் வெற்றியாளர் ஆகின்றீர்கள்

**–டாக்டர் மார்ட்டின் லூதர்கிங்**



tnebes.org

## 54 வது மாநில பொதுக்குழு

நமது பொறியாளர் சங்கத்தின் 54 வது மாநில பொதுக்குழு ஜூன் 8,9 ஆகிய தேதிகளில் நாமக்கல்லில் பொா்.A.அந்தோணி படோவராஜ், மாநில தலைவர், அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது கூட்டத்தின் முதல் நாள் நிகழ்வு காலை 10:30 மணி அளவில் தமிழ் தாய் வாழ்த்துடன் துவங்கியது.

2019ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற 53வது பொதுக்குழுவிற்கு பின்னர் கொரோனா உள்ளிட்ட காரணிகளால் மரணித்த நமது செயலாளர் / அலுவலகம் பொர்.K.அன்பரசு, முன்னாள் செயலாளர் / வெளியீடு பொர்.T.தனசேகரன், முன்னாள் செயலாளர் / தலைமை நிலையம் பொர்.P.சுதாகர், முன்னாள் ஈரோடு / கிளைச் செயலாளர் பொர்.A.வெங்கடாசலம், கடலூர் கிளை தலைவர் பொர்.T.குமாரவேலு, முன்னாள் மதுரை கிளை செயலாளர் பொர்.M.சண்முகம் மற்றும் சங்கத்தின் முன்னோடிகளான பொர்.T.ரங்கராஜன், பொர்.L.பலராமன், நமது சங்க அலுவலக பணியாளர் திரு.T.ரவி (எ) ஆறுமுகம் மற்றும் பல உறுப்பினர்களுக்கும் இரங்கல் தெரிவிக்கும் முகமாக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் நாமக்கல் கிளை தலைவர் பொர். M.வெங்கடாசலம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். பின்னர் நமது மாநில தலைவர் பொர்.A.அந்தோணி படோவராஜ், அவர்கள் தலைமை உரை ஆற்றினார்கள். அவர் தனது உரையில் கொரோனா பெருந்தொற்றால் 30க்கும் மேற்பட்ட நமது பொறியாளர்களை இழந்து நிற்பதும், அவர்களது இறுதிச் சடங்கில் கூட கலந்து கொள்ள முடியாமல் இருந்த நிலை மேலும் வருத்தத்தினை அளித்ததாகவும் தெரிவித்தார்.

கொரோனா தொற்று ஊரடங்கு உள்ளிட்ட பல தடைகள் இருந்த போதிலும் தனியார்மயம், அயல் பணி ஒப்படைப்பு போன்ற பல விஷயங்களுக்காக தர்ணா, நுழைவாயில் கூட்டம், உள்ளிருப்பு போராட்டம் போன்ற பல நேரடி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மின்வாரிய அனைத்து தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவுடன் இணைந்து நடத்தியது குறித்து தெரிவித்தார். மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழுவின் இயக்கங்களை வெற்றிகரமாக நடத்திச் செல்வதில் நமது பொறியாளர் சங்கத்தின் சிறப்பான பங்களிப்பு குறித்து தெரிவித்தார். மேலும் பொறியாளர் சங்கம் தனது தனிப்பட்ட கோரிக்கைகளை வென்றெடுப்பதில் முனைப்பு காட்டி பல பதவி உயர்வுகளை பெற்றெடுத்தது குறித்து தெரிவித்தார்கள் மேலும் அவர் வருங்காலங்களில் நாம் விழிப்புடன் இருந்து தனியார் மயம் உள்ளிட்ட பல தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று தெரிவித்தார்கள்.

நமது சங்கத்தில் சிறப்பான சங்கப் பணியாற்றி பணி நிறைவு செய்துள்ள பொர்.S.மணிவாசகன், செயலாளர் / நெல்லை மண்டலம், பொர்.N.தனபால், செயலாளர் / கோவை மண்டலம், ஆகியோரின் சங்கப் பணிகளை பாராட்டி பேசினார்.

பின்னர் நமது பொதுச்செயலாளர் பொர்.V.S.சம்பத்குமார், அவர்கள் பொதுச் செயலாளர் அறிக்கையினை பொதுக்குழுவுக்கு அளித்தார்கள். அவர் தனது அறிக்கையில் பல இந்நாள் முன்னாள் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் மறைவு தனக்கு வேதனை அளித்தது பற்றி தெரிவித்தார். மேலும் அவர் இப்பொதுகுழுவில் முதல் முறையாக பங்கேற்கும் பொதுக்குழு உறுப்பினர்கள் பொர்.S.கனகராஜ், சென்னை / தெற்கு கிளை, பொர்.S.கார்த்திகேயன், சேலம் கிளை, பொர்.T.ஜெயவர்மன், மேட்டூர், பொர்.A.அசோக்குமார், சிவகங்கை, பொர்.K.முத்துராமலிங்கம், தேனி, பொர்.M.இளவழகன், கடலூர், பொர்.M.கார்த்திக், கோயம்புத்தூர், பொர்.C.அப்பன்சீனிவாசன், சென்னை வடக்கு, பொர்.S.பாலாஜி, சென்னை மையம், பொர்.S.குமார், வடசென்னை அனல் மின் நிலையம், பொர்.M.மணி, செங்கல்பட்டு, பொர்.M.வெங்கடகார்த்திகேயன், மேட்டூர் அனல் மின் நிலையம், பொர்.T.விஜயராகவன், பொர்.P.ராஜேஷ்கண்ணா, மேட்டூர் அனல்



tnebes.org

மின் நிலையம், பொா்.N.காா்மேகம், ராமநாதபுரம், பொா்.A.இப்ராஹிம், விருதுநகா், பொா்.K.கண்ணன், திருவாரூா், பொா்.S.பஞ்சநாதன், தஞ்சை, பொா்.A.இளையராஜா, கிருஷ்ணகிாி, பொா்.J.மதன், பொா்.M.பேச்சிமுத்து, தூத்துக்குடி அனல் மின் நிலையம், பொா்.A.அருள் சரவணன், வேலூா், பொா்.A.ராமலிங்கம், கடலூா் ஆகியோருக்கு வாழ்த்துக்கள் தொிவித்து வரவேற்றாா்கள்.

பின்னா் நமது சங்கத்தின் அமைப்பு சாா்ந்த கூட்டங்கள் மற்றும் மின்வாாிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவின் கூட்டங்கள் பற்றி விளக்கமாக தொிவித்தாா்கள். பின்னா் தொழில்நுட்ப உதவியாளா் மின்னியல் உள்முகத்தோ்வு, இளநிலை பொறியாளா் மின்னியல் இரண்டாம் நிலை, இளநிலை பொறியாளா் இயந்திரவியல் இரண்டாம் நிலை பதவி உயா்வு முறையில் மாற்றம், இளநிலை பொறியாளா் முதல் நிலை மின்னியல் பதவி உயா்வு, இளநிலை பொறியாளா் இயந்திரவியல் முதல் நிலை பதவி உயா்வு, உதவி செயற்பொறியாளா் மின்னியல் இயந்திரவியல் மற்றும் சிவில், செயற்பொறியாளா் மின்னியல், உதவி பொறியாளா் (உள்முகத் தோ்வு) ஆகிய பதவிகளை கடந்த 2019 ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு நாம் பல நடவடிக்கைகள் மூலமும், நீதிமன்ற வழக்குகளை சிறப்பாக கையாண்டதன் மூலமும் நாம் பெற்றுள்ளதை தொிவித்தாா்கள். செயற்பொறியாளா் /சிவில் (சாா்பு) வழங்குவதில் பட்டய பொறியாளா்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டதை சுட்டிக்காட்டி சாி செய்தது குறித்து தொிவித்தாா்கள். மேலும் வாாியத் தலைவா் அவா்களுடன் 9.12.2020 அன்று 17.4.2021 அன்றும் நடைபெற்ற பேச்சு வாா்த்தைகளில் அயல் பணி ஒப்படைப்பு நிறுத்தம், உதவி பொறியாளா் உள்முக தோ்வு, நிலுவையில் உள்ள பதவி உயா்வுகள், புதிய துணை மின் நிலையங்களுக்கு பதவி அனுமதி உள்ளிட்ட 14 கோாிக்கையில் குறித்து விாிவாக பேசப்பட்டது குறித்து தொிவித்தாா்கள். 04.11.2020 அன்று நடைபெற்ற தா்ணா மற்றும் 21.12.2020 அன்று நடைபெற்ற உள்ளிருப்பு போராட்டத்தின் விளைவாக ஐந்து துணை மின் நிலையங்களின் அயல் பணி ஒப்படைப்பு உத்தரவு திரும்ப பெறப்பட்டது குறித்து தொிவித்தாா்கள். புதிய வாாிய தலைவா் அவா்களை பலமுறை சந்தித்து நிலுவையில் உள்ள பதவி உயா்வுகள் பதவி அனுமதி உள்ளிட்ட பல கோாிக்கைகள் குறித்து குறிப்பாக பராமாிப்புபணி, அதற்கான தளவாடங்கள், வேலை செய்ய போதிய ஆட்கள், ERP மென்பொருள், அதில் உள்ள பல குறைபாடுகளை சுட்டிக்காட்டி அவற்றை சாி செய்வது, அந்த மென்பொருள் சிறப்பான முறையில் பயன்பாட்டுக்கு கொண்டுவர பிாிவு அலுவலகங்கள் வரை கணினி உள்ளிட்ட பொருட்கள், பேண்ட் வித் ஆகியவை வழங்க வேண்டியது குறித்தும், Hotlines ல் பணிபுாியும் பணியாளா்களுக்கு இன்சூரன்ஸ், Hotlines படி, பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குவது குறித்தும், விநியோகத்தில் உள்ள உதவி செயற்பொறியாளா் பதவிகளின் அவசியம், டெண்டா் பவா் மாற்றம், Imprest பாஸ் ஆா்டா் பவா், மின்வாாியத்தில் நடைபெறும் விபத்துக்கள் ஆகியவை குறித்தும் பலமுறை விாிவாக விவாதிக்கப்பட்டது குறித்து விளக்கமாக தொிவித்தாா்கள். மேலும் 07.10.2021 அன்று வாாிய தலைவா் அவா்களுடனான திட்டமிட்ட பேச்சுவாா்த்தை, அதில் வைக்கப்பட்ட கோாிக்கைகள் குறித்து விளக்கமாக தொிவித்தாா்கள். மின்வாாிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு முன்னாள் வாாிய தலைவாின் தொழிலாளா் விரோத நடவடிக்கைகளையும், முத்தரப்பு ஒப்பந்தத்தை மீறி அயல் பணி ஒப்படைப்பு மூலம் தனியாா் மயமாக்கலை அமல்படுத்த முயற்சித்ததையும், கண்டித்து 04.11.2020 அன்று நடைபெற்ற தா்ணா, தொடா்ந்து விநியோக பிாிவுகளில் பணிகளை பணியாாிடம் ஒப்படைக்கும் BP 82 வெளியிடப்பட்டது ஆகியவற்றை கண்டித்து 20.11.2020 அன்று தொழிற்சங்க தலைவா்கள் வாாிய தலைவரை சந்திப்பதற்காக வாாிய தலைவா் அலுவலக வளாகத்திலேயே காத்திருப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும், அதனைத் தொடா்ந்து வாாிய தலைவருடன் ஆன பேச்சுவாா்த்தை நடைபெற்றது குறித்தும் விளக்கமாக தொிவித்தாா். ஆனால் கோாிக்கைகள் மீது எந்த ஒரு நடவடிக்கையும் ஏற்படாத நிலையில் தான் 21.12.2020 அன்று மாநிலம் தழுவிய காத்திருப்பு போராட்டம் நடத்த கூட்டுக்குழுவினால் முடிவு செய்யப்பட்டதையும், போராட்டம் நமது மின்வாாிய பணியாளா்களின் ஒட்டுமொத்த பங்களிப்பாலும், மாண்புமிகு மின்துறை அமைச்சா்



tnebes.org

அவர்கள் தலையீட்டின் பேரில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நாள் அன்று மாலையே துணை மின் நிலையங்களுக்கான அயல் பணி ஒப்படைப்பு ஆணையையும், விநியோக பிரிவுகளில் அயல் பணி ஒப்படைப்பு ஆணையையும் வாரியம் திரும்ப பெற்றுக் கொண்டது குறித்தும் தெரிவித்தார்கள்.

மேலும் புதிய மின்துறை அமைச்சர் அவர்களுடன் 24.08.2021 அன்று வாரிய வளாகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது பேச்சுவார்த்தையில் விநியோகப் பிரிவில் நிலவி வரும் பிரச்சனைகள், அத்தியாவசிய பொருட்களின் குறைந்தபட்ச கையிருப்பை உறுதி செய்தல், திருத்தப்பட்ட டெண்டர் அதிகாரங்களால் ஏற்பட இருக்கும் பிரச்சனைகள், தொழில்நுட்ப உதவியாளர் உள்ளிட்ட வாரியத்தில் உள்ள ஆரம்ப நிலை காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டிய அவசியம், ஊர் மாறுதலில் வாரிய விதிகளை முறையாக பின்பற்றுதல் உள்ளிட்ட பல கோரிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டது குறித்து விரிவாக அறிக்கையில் தெரிவித்தார். மேலும் வாரிய ஆணை எண் 2, நாள்.12.04.2022 ன் தாக்கம் குறித்தும், அதை எதிர்கொள்ள கூட்டு நடவடிக்கை குழு எடுத்து வரும் நடவடிக்கை குறித்தும் தெரிவித்தார்கள். Additional Charges Allowance வழங்குவதில் உள்ள இடர்பாடுகள் குறித்தும், அதை சரி செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் பலமுறை வாரியத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது குறித்து தெரிவித்திருந்தார்கள். மேலும் முதுநிலை பட்டம் ஊக்க ஊதிய உயர்வு வழங்குவதில் உள்ள குறைகளை சரி செய்திட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவித்தார்கள். மேலும் டிசம்பர் 12 அன்று முன்னாள் பொறுப்பாளர்களின் நினைவாக ஆண்டு தோறும் நடத்தப்படும் ரத்ததான முகாம் குறித்து தெரிவித்தார்கள். மத்திய அரசின் முடிவின்படி யூனியன் பிரதேசங்களில் தனியார் மய நடவடிக்கைகளை தொடர்ந்து சண்டிகர், ஜம்மு காஷ்மீர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களில் மின்வாரியத்தை தனியாரிடம் அளிக்கும் நடவடிக்கைகள் குறித்தும் அதனை எதிர்கொண்டிட NCCOEEE மற்றும் AIFOPDE சார்பில் எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கை குறித்து விரிவாக தெரிவித்தார்கள். பின்னர் கொரோனா பெருந்தொற்று காலத்தில் நமது உறுப்பினர்கள் பலர் மறைந்தது, அவர்களது குடும்பத்திற்கான காமதேனு நலநிதி பணப்பயன்கள் விரைவாக வழங்கப்பட்டது குறித்தும் தெரிவித்தார்கள். பின்னர் தனது நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

பின்னர் பொதுப் பொருளாளர் பொர்.G.கார்த்திகேயன் அவர்கள் 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளின் வரவு செலவு கணக்குகளை பொதுக் குழுவிற்கு தெரிவித்தார்கள். 2019 ஆம் ஆண்டு மாநிலத் தலைவர் தலைமையில் மண்டலம் தோறும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி கிளை வரவு செலவு கணக்குகளை சரி பார்த்தும், கணக்கு வழக்குகள் எழுதப்பட வேண்டிய முறையினை சீராக பின்பற்றிட கேட்டுக் கொள்ளப்பட்டது குறித்தும், அனைத்து கிளைகளும் கனரா வங்கியில் கணக்கு துவங்கிட கேட்டுக் கொள்ளப்பட்டது குறித்தும் தெரிவித்திருந்தார்கள். சங்கம் நீதிமன்ற செலவினங்களுக்காக 2019 முதல் 2022 மே வரை ரூபாய் 16,24,000 செலவு செய்துள்ளது குறித்து தெரிவித்தார்கள் 2019 ஆம் ஆண்டின் மொத்த வரவு ரூபாய் 90,46,613 ஆகவும் மொத்த செலவு ரூபாய் 97,36,482 ஆகவும் 2020 ஆம் ஆண்டின் மொத்த வரவு ரூபாய் 49,54,103 ஆகவும் மொத்த செலவு ரூபாய் 33,18,317 ஆகவும் 2021 ஆம் ஆண்டின் மொத்த வரவு ரூபாய் 50,22,119 ஆகவும் மொத்த செலவு ரூபாய் 27,99,332 ஆகவும் 2022 ஆம் ஆண்டின் மே மாதம் வரையிலான மொத்த வரவு ரூபாய் 47,96,802 ஆகவும் மொத்த செலவு ரூபாய் 20,72,246 ஆகவும் இருந்தது குறித்து தெரிவித்தார்கள். மேலும் ராயப்பேட்டை சங்க கட்டிட நிதி ரூபாய் 10 ஆயிரத்திற்கு மேல் அளித்தவர்களின் பட்டியலில் 921 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளதாகவும், விரைவில் இதை ஆயிரத்துக்கு கொண்டு சென்றிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மேலும் அவர் வருமானவரித்துறை நமக்கு கணக்குகளை முடித்து சமர்ப்பிக்க கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து கிளைகளிலிருந்து PCB க்கள் பெற்று மைய அமைப்பில் முழு வீச்சில் பணிகள் நடைபெற்று வருவது குறித்தும் தெரிவித்தார்கள். மேலும் அவர் தமது பணிகளுக்கு உதவியாக இருந்தவர்களுக்கு நன்றி கூறினார்கள்.



tnebes.org

அடுத்த நிகழ்வாக பொா்.நே.ரா.செந்தில், செயலாளா் / வெளியீடு அவா்கள் அறிக்கையினை அவைக்கு சமா்ப்பித்தாா்கள். 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கி தற்போதைய ஆண்டின் ஜூன் மாதம் வரையில் 37 இதழ்கள் உறுப்பினா்கள் எண்ண ஓட்டம், பொறுப்பாளா்கள் செயல்பாடுகள், சங்கத்தின் போராட்டப் பாதைகள், வெற்றிப் பயணங்கள், மின்சார வாரியம், இந்திய அளவிலான மின்துறை ஆகியவற்றை உள்ளடக்கிய தகவல் பெட்டகமாக வெளியிடப்பட்டது குறித்தும், சங்கத்தின் கடந்த கால போராட்டங்களும் வெற்றிகளும் சாதனைகளும் புதிய தலைமுறைக்கு தெரிவிக்க வேண்டியதன் அவசியத்தினை உணா்ந்து பல இதழ்கள் சிறப்பு இதழ்களாக வெளியிடப்பட்டது குறித்து தெரிவித்தாா்கள். மேலும் இதழில் பிரிவு பொறியாளரின் ஒரு நாள் பிரிவுப் பொறியாளா் ரயில் பயணம், ஆளுமை திறன் வளா்ப்போம், வெற்றிச் சிந்தனைகள், மின் விபத்தினை தடுப்போம், ஆத்திச்சூடி, உங்களுக்கு ஒரு நினைவூட்டல், தெரிந்து செயல்படுவோம் என்ற தொடா்கள் வெளியிடப்பட்டது குறித்து தெரிவித்தாா்கள். மின் அலையில் தலையங்கத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து எழுதப்பட்டது குறித்து தெரிவித்தாா்கள். கொரோனா முதல் அலையில் கடும் ஊரடங்கு அமலில் இருந்த நிலையில் மின்அலை அச்சுப்பதிப்பாக வெளியிட இயலாமல் இருந்த நிலையில் மாற்று ஏற்பாடாக மின்புத்தக வடிவில் தொடா்ந்து நான்கு மாதங்கள் வெளியிட்டது குறித்தும் தெரிவித்தாா்கள். மேலும் தற்போது உள்ள கடும் அச்சுப்பணி விலை உயா்வு, காகித தாள் விலை உயா்வு ஆகியவற்றால் மின்அலையின் சந்தாவினை உயா்த்த வேண்டியதன் அவசியம் குறித்து தெரிவித்தாா்கள். மேலும் அவா் ஆசிரியா் குழு மற்றும் மின்அலை வெளியிட உதவியாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தாா்கள்.

பொதுக்குழுவின் அடுத்த நிகழ்வாக பொா்.A.P.ராகேஷ், காமதேனு நலநிதி பொருளாளா் அவா்கள் காமதேனு நலநிதி அறிக்கையினை பொதுக்குழுவிற்கு சமா்ப்பித்தாா்கள். எங்கோ ஒரு பொறியாளா் இறப்பின் அவரது குடும்பத்திற்கு காமதேனு நலநிதி சேமிப்பு தொகையின் வட்டியின் ஒரு பகுதி கிடைப்பதன் மூலம் நாம் பிறருக்கு நம்மையும் அறியாமல் சேவை செய்யும் திட்டம் தான் காமதேனு நலநிதி திட்டம் என்று தெரிவித்தாா்கள். காமதேனு நலநிதி சந்தா தொகை ரூ.250 இல் இருந்து தற்போது ரூ.5000 வரை படிப்படியாக பணப்பயன் உயா்வுடன் உயா்த்தப்பட்டது குறித்து விரிவாகவும், 1976 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து விளக்கமாக அறிக்கை அளித்தாா்கள். 2019 ஆம் ஆண்டின் காமதேனு நலநிதியின் சந்தா தொகையாக ரூபாய் 19,43,720 ஆகவும் மறைந்த பொறியாளா்களுக்கு ரூபாய் 36 லட்சம் வழங்கப்பட்டது என்றும் 2020 ஆம் ஆண்டு சந்தா தொகையாக 10,23,910 ஆகவும் மறைந்த பொறியாளா்களுக்கு 15 லட்சம் வழங்கப்பட்டது குறித்தும் 2021 ஆம் ஆண்டு சந்தா தொகையாக ரூபாய் 7,50,630 ஆகவும் மறைந்த பொறியாளா்களுக்கு ரூபாய் 76,10,000 வழங்கப்பட்டது என்றும் 2022 ஆம் ஆண்டின் மே மாதம் வரையிலான சந்தா தொகை ரூ2,95,400 ஆகவும் மறைந்த பொறியாளா்களுக்கு ரூ.15.00 லட்சம் வழங்கப்பட்டது குறித்தும் தெரிவித்தாா்கள். மேலும் வைப்பு நிதியின் வட்டி விகிதம் மிகவும் குறைந்துள்ள நிலையில் தற்போது வைத்துள்ள சந்தா தொகையினை கொண்டு பணப்பயன்கள் முழுமையாக வழங்க இயலாத நிலை இருப்பதாகவும் இதனை கருத்தில் கொண்டு காமதேனு நலநிதியினை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து தெரிவித்தாா்கள். மேலும் அவா் தனது பணிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டாா்கள்.

பின்னா் அறிக்கைகளின் மீதான விவாதம் தொடங்கியது விவாதத்தில் பொா்.சுப்லீரமணி, திண்டுக்கல் பொா்.S.முருகன், விழுப்புரம் பொா்.J.டேவிட்ராஜ், வேலூா், பொா்.N.சேகா், சேலம், பொா்.R.பாலகிருஷ்ணன், வடசென்னை அனல் மின் நிலையம், பொா்.S.மணிவாசகன், நெல்லை, பொா்.K.முத்துகிருஷ்ணன், புதுக்கோட்டை, பொா்.R.சோமேஸ்வரன், பொா்.S.நல்லமுத்து, கோபி, பொா்.M.முருகன், கரூா், பொா்.M.இளவழகன், கடலூா், பொா்.A.சிவசுப்பிரமணியன், விருதுநகா், பொா்.K.ராஜேந்திரன், பெரம்பலூா், பொா்.V.சங்கா்கணேஷ், திருச்சி, பொா்.R.நடராஜன்,



tnebes.org

திருவண்ணாமலை, பொர்.T.அரியசெல்வம், தூத்துக்குடி அனல் மின் நிலையம், பொர்.K.கண்ணன், திருவாரூர், பொர்.S.ரவிசங்கர், சென்னை/மேற்கு, பொர்.S.அப்பன்சீனிவாசன், சென்னை வடக்கு, பொர்.M.வெங்கடகார்த்திகேயன், மேட்டூர் அனல் மின் நிலையம், பொர்.P.சுந்தர், தஞ்சாவூர், பொர்.R.சந்தோஷ்குமார், சென்னை வளர்ச்சி வட்டம், பொர்.D.சத்தியபிரகாசம், கள்ளக்குறிச்சி, பொர்.B.கோபு, கோயம்புத்தூர், பொர்.K.மலைச்சாமி, ராமநாதபுரம், பொர்.S.ஜெயக்குமார், நாகை, பொர்.R.தணிகைச்செல்வன், திருப்பத்தூர், பொர்.P.கமல்குமார், நீலகிரி ஆகியோர் அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கேற்று கருத்துக்களை தெரிவித்தனர். பின்னர் அறிக்கைகள் ஒருமனதாக பொது குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2022–க்கான பொறுப்பாளர்கள் தேர்தலை பொர்.G.முரளிகிருஷ்ணன், பொர்.S.பாலசுப்ரமணியன் ஆகியோர் நடத்தினர். புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதனை தொடர்ந்து முதல் நாள் நிகழ்வு முடிவுக்கு வந்தது.


ஜூன் 26 ஆம் தேதி பொதுக்குழுவின் இரண்டாம் நாள் நிகழ்வு தொடங்கியது. முதலில் மையப் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. பொறுப்பாளர் கூட்டத்தில் பொதுக்குழுவில் விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள், முன்மொழி வேண்டிய தீர்மானங்கள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. பொதுக்குழு கூட்டம் 10.30 மணி அளவில் துவங்கியது. கூட்டத்தில் பொதுச் செயலாளர், பொதுப்பொருளாளர் ஆகியோர் நமது சங்கத்தில் அமைப்பு ரீதியாகவும் வாரிய ரீதியாகவும் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், தீர்மானங்கள் ஆகியவைகளை முன்மொழிந்தார்கள். பின்னர் அதன் மீதான விவாதம் நடைபெற்றது விவாதத்தில் பொர்.D.சத்யபிரகாசம், கள்ளகுறிச்சி, பொர்.S.P.சந்திரன், நாமக்கல், பொர்.A.அருள்சரவணன், வேலூர், பொர்.P.K.சரவணன், கிருஷ்ணகிரி, பொர்.S.நல்லமுத்து, கோபி, பொர்.S.இப்ராஹிம், விருதுநகர், பொர்.R.தணிகைச்செல்வன், திருப்பத்தூர், பொர்.M.ரங்கசாமி, கள்ளக்குறிச்சி, பொர்.S.முருகன், விழுப்புரம், பொர்.S.ராமலிங்கம், கடலூர், பொர்.S.நித்தியானந்தன், செங்கல்பட்டு, பொர்.C.சுப்பிரரமணி, திண்டுக்கல், பொர்.S.ரவிசங்கர், சென்னை மேற்கு, பொர்.K.மலைச்சாமி, ராமநாதபுரம், பொர்.J.வெங்கடேசன், காஞ்சிபுரம், பொர்.J.மதன், தூத்துக்குடி அனல் மின் நிலையம், பொர்.S.கனகராஜ், சென்னை தெற்கு, பொர்.R.தமிழ்ச்செல்வன், சென்னை வடக்கு, பொர்.J.டேவிட்ராஜ், வேலூர், முனைவர்.சா.சம்பத், திருவாரூர், பொர்.A.அசோக்குமார், சிவகங்கை, பொர்.R.S.சுமின்ராஜ், கன்னியாகுமரி, பொர்.M.கார்த்திக், கோயம்புத்தூர், பெர்.R.சங்கர், திருச்சி, பொர்.P.கமல்குமார், நீலகிரி, பொர்.S.குமார், வடசென்னை அனல் மின் நிலையம், பொர்.P.ராஜேஷ்கண்ணா, மேட்டூர் அனல் மின் நிலையம், பொர்.C.சந்திரசேகர், திருவண்ணாமலை, பொர்.T.ஜெயவர்மன், மேட்டூர், பொர்.S.பஞ்சநாதன், தஞ்சை,பொர்.S.கார்த்திகேயன், சேலம், பொர்.K.ஆனந்த்பாபு, நாமக்கல் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

பின்னர் சங்கம் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தான தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. நமது மின் அலை இதழ் கிளை உறுப்பினர்களின் முகவரியில் மாற்றம், புதிய முகவரிகள் சேர்த்தல் ஆகியவை இணைய வழியாக அந்தந்த கிளைச் செயலாளர்களே செய்து கொள்ளும் வகையில் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புதிய அமைப்பை நமது முன்னாள் மைய பொறுப்பாளர், சங்கத்தின் முன்னோடி, பொர்.V.சந்திரசேகரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். பின்னர் பொதுக்குழுவை சிறப்பாக நடத்திக் கொடுத்த ஈரோடு மண்டல, கிளைகளின் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் தேசிய கீதம் பாடப்பட்டு பொதுக் குழு நிகழ்வுகள் முடிவுக்கு வந்தன.



tnebes.org






சங்க உறுப்பினர்களின் மின்அலை இதழ் முகவரியை சேர்க்க, மாற்ற கிளை செயலாளர்களே இணையம் மூலம் செய்து கொள்ளும் வசதியை சங்கத்தின் முன்னோடி **பொர்.V.சந்திரசேகரன்** அவர்கள் துவக்கி வைத்தார்.



tnebes.org




பொறியாளர் சங்கத்தின் 2022ம்



tnebes.org




ஆண்டின் புதிய பொறுப்பாளர்கள்



tnebes.org






புதிய சங்க பொறுப்பாளர்கள் மின்வாரிய தலைவர் மற்றும் காவல்துறை விழிப்புபணித் தலைவர் ஆகியோரை மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.



tnebes.org

**SANGAM'S VIBRANT LIEUTENANT FROM THE EAST**



Beloved Engineer K.Ravichandran, Junior Engineer / Electrical I Grade from Thiruvarur Circle and former Secretary Administration retired from Board's service on 30.06.2022 last month after successfully completing more than 3 decades of service in the Board. Beloved Engineer started his Board's career at Mettur Circle as Technical Assistant during the year 1987 and later shifted to his home town Thiruvarur during the year 1989.

It was during this time Nagai Branch was formed newly in the year 1992, being bifurcated from Thanjavur Branch and started functioning as a new team. Within a short period beloved Engineer G.Murali Krishnan took over the mantle as Branch Secretary. The team became more vibrant and beloved Engineer K.Ravichandran too joined this team in a couple of years having been entrusted the responsibility of Branch Treasurer cum General Council Member, the post which was held by him for many years.

His field work in those early days were matchless as he travelled around all corners of the geographically vast Nagai Circle, meeting members hearing their grievances and collecting funds for our Sangam with much dedication and commitment.

Those days the Nagai team comprising of beloved Engineer G.Murali Krishnan, beloved Engineer K.Ravichandran, late beloved Engineer R.Vasu and beloved Engineer R.Nagalingam were quite formidable setting high standards and guarding our fort Sangamin not only Nagai Circle but also Trichy Region under the tutelage of beloved Stalwart Engineer S.Dhanavelu who was the Regional Secretary of Trichy Region then.

When beloved Engineer G.Murali Krishnan had to shift to Chennai during the year 2008 to take up the responsibility of State President he fitted into his shoes aptly as Branch Secretary of Nagai making a formidable team with beloved Engineer R.Vasu and beloved Engineer S.Sambath until formation of Thiruvarur Branch during the year 2016.

The sudden demise of beloved Engineer R.Vasu the same year left a huge void in Nagai Branch which is yet to be filled in completely, with Thiruvarur team needing to compensate it hugely.

Beloved Engineer K.Ravichandran has served the Central Unit too for more than a decade serving as Secretary Administration and Secretary Website. Even though he is a less spoken person has always been vibrant being first to accede any call when the team warranted particularly in the aftermath of the happenings since 2012. He had a close affinity with all the Office Bearers and Seniorsparticularly with our former General Secretary late



tnebes.org

beloved Engineer V.Ashok Kumar.

It is this affinity and commitment, which took him to Jalandhar, Punjab in December 2016 to attend the National meeting of All India Federation of Power Diploma Engineers – AIFOPDE as Office Secretary along with then General Secretary late beloved Engineer V.Ashok Kumar and two other State Office Bearers who left us totally immersing us in deep sorrow.

The ordeal suffered by our beloved Engineer K.Ravichandran and his family after that tragedy has been quite huge. Thank God for leaving him with us, his unlimited friends and his caring family of two daughters.

A selfless character never expected or asked anything for himself but had been a character of great generosity for everything and great friendship with everyone a quality envied by everyone including me.

Wishing our beloved Engineer K.Ravichandran a happy retirement life and pray to God to bless him with a joyful 2nd innings post retirement.

-Er.A.Antony Padovaraj
State President.

## ஆசிரியர் மடல்

அன்பு பொறியாளர்களே வணக்கம்,

நமது பொறியாளர் சங்கத்தின் 54வது மாநில பொதுக்குழு கூட்டத்தில் என்னை வெளியீட்டுச் செயலாளராக தேர்வு செய்து மின்அலை பணியினை செய்ய ஆணையிட்ட மாநிலத் தலைவர், பொதுச்செயலாளர், பொதுப் பொருளாளர் மற்றும் அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு மின் அலை ஒவ்வொரு மாதமும் சிறப்பாக வெளிவர உங்கள் அனைவரின் ஒத்துழைப்பை பணிவுடன் வேண்டுகிறேன்.

கிளைச்செயலாளர்கள் அனைவரும் தங்கள் கிளையில் நடைபெறும் சங்க நிகழ்ச்சிகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் செய்திகளை உடனுக்குடன் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் மின் அலைக்கு வாரியம், வாரிய நடைமுறைகள், வாரிய ஆவணங்கள், தொழில் நுட்பம், பாதுகாப்பு, தன்னம்பிக்கை, தொழிலாளர் நலச்சட்டங்கள், அரசு அமைப்புகள், திட்டங்கள் தொடர்பான கட்டுரைகளை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இதனை மின் அலை ஆசிரியர் குழு பரீசீலித்து தகுந்தவற்றை பிரசுரிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். பொறியாளர் சங்கத்தின் பொறியாளர்களை அறிவுசார் சமுதாயமாக மாற்ற எல்லா முயற்சிகளையும் இணைந்து செய்வோம் வாழ்க பொறியாளர் சங்கம்.

என்றும் சங்கப்பணியில்
**R.சந்தோஷ் குமார்**
ஆசிரியர் மின்அலை
rohithsanthosh2007@gmail.com



tnebes.org

## KAMADHENU BENEVOLENT FUND – VI th SCHEME

**A friend in need is a friend indeed**

Sangam has been the true friend to the family of its deceased member through the noble scheme, Kamadhenu Benevolent Fund – KBF. This noble scheme formulated by our Sangam's forefathers as KBF – I, four decades ago with benevolent amount of Rupees 10,000/- has grown taller with present's KBF - V benevolent amount of Rupees 3,00,000/- which is quite incredible.

This incredible journey started way back in the year 1976 when the need arose after the sudden demise of a young member at Tirunelveli Circle who was the sole bread winner of the family. Neither the Board nor our Sangam could do anything to the family financially. Hence this noble scheme of Kamadhenu Benevolent Fund was started.

The first beneficiary was the family of late beloved Engineer Er.T.Baskaran, then Tester 2nd Grade of Villupuram circle. Benevolent fund disbursement to the family was done during a meeting organized by our Sangam exclusively for this fund disbursement.

Then Chairman of Tamilnadu Electricity Board respected Thiru. B.Vijayaraghavan I.A.S. who was the chief invitee of the meeting handed over the Benevolent Fund to the family of the deceased. During his address respected then Chairman hailed the motto of our Sangam in caring for the family of its members and appreciated the Office Bearers for their astute thinking.
As ever Sangam conducted this meeting too in a unique manner giving importance for the Kamadhenu Benevolent Fund alone. No demand was placed before the respected then Chairman who was participating in a Union's meeting for the first time. Yet Sangam's long pending demand culminated to reality when respected then Chairman announced withdrawal of direct recruitment of Junior Engineer / II Grade which was in existence in the Board until that time.

So it's no surprise that the incredible journey of Kamadhenu Benevolent Fund, presently scheme – V doing wonders to the family of the deceased, withstanding the COVID pandemic too. Exclusive Office Bearers entrusted for this scheme handling the enrollment of members and funds is the reason behind its success.

Even though the death rate tripled during this pandemic the benevolent fund disbursement to the family of the deceased went on smoothly without hiccups aided by the contribution of benevolent fund donation from present members, retired members and even families of deceased members which shows the affinity of everyone towards our Sangam and Kamadhenu Benevolent Fund.



tnebes.org

Now this noble scheme has been upgraded. During the recently held General Council Meeting at Namakkal, Sangam has introduced the Kamadhenu Benevolent Fund – VI th Scheme with the benevolent amount of Rupees 3,50,000/-

<u>For enrollment to the newly introduced KBF – VI th scheme</u>

- New members have to pay Rupees 10,050/- as subscription.
- Existing members in KBF – Vth Scheme need to pay just Rupees 5,000/- to enroll to this new scheme.
- Existing members in KBF – IVth Scheme (New) need to pay Rupees 7,000/- to enroll to this new scheme.

Members should pay the Annual Donation to our Sangam regularly every year. KBF – V th scheme will be in existence until further notice but members can enroll to this existing KBF – V th scheme only up to 30.06.2023. Moreover KBF – IV th (New) Scheme (Subscription amount of Rupees 3000/- and benevolent fund of Rupees 1,10,000/-) will be discontinued from 31.12.2022.

**"To do good is noble. To tell others to do good is even nobler"**

Hence it is the duty of all members to not only enroll themselves in KBF – VIth scheme but also instigate other members too to join in KBF – VI th scheme to benefit not just their families alone but of their brethren's too letting the incredible journey continue forever.

**-Er.A.Antony Padovaraj**
State President

## <u>திருமண அழைப்பிதழ்</u>

**பொர்.V.சுரேந்திரபாபு** AEE / TNEB மற்றும் S.B.**விஜயலக்ஷ்மி** ஆகியோரின் மகள்
திருநிறைச்செல்வி.**T.S.சஞ்சனா,B.E.**, என்ற மணமகளுக்கும்

**சத்யநாராயணமூர்த்தி – கங்காபவானி** அகியோரின் மகன்
திருநிறைச்செல்வன்.**சானிபினி ஸ்ரீகாந்த், B.Tech.,** என்கிற மணமகனுக்கும்
04.08.2022 வியாழக்கிழமை, வேலூர் மாவட்டம் திருவலம், **A.S.குருசாமி மஹாலில்**
நடைபெறும் திருமணத்திற்கு அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

தங்கள் அன்புள்ள
**பொர்.V.சுரேந்திரபாபு** AEE / TNEB
மண்டல செயலாளர் / பொறியாளர் சங்கம்/ வேலூர்.
செல் :9443627585
மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1000 அளித்துள்ளார், நன்றி...



tnebes.org

# தொழில் உறவுகள் (Industrial Relations)

சென்ற இதழின் தொடர்ச்சி....

**சிறந்த தொழிற்சங்க பொறுப்பாளர்களின் நடவடிக்கைகள்:**

1. தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலாளர் பிரிதிநிதிகள் சுய நல மற்றவர்களாக பொது நலத்தில் அக்கரை உள்ளவராக, பிரதி பலன்பாராமல் பணியாற்றக் கூடியவராக இருக்க வேண்டும்.
2. மிகுந்த பொறுமையும், சகிப்புத்தன்மையும் உடையவராக இருக்க வேண்டும்.
3. பணிபுரியும் தனியார்துறை / பொதுத்துறை நிறுவனங்களின் உற்பத்தி, பணியாளர், நிதி நிலைமை, நிர்வாகம் குறித்து சரியான புரிதல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தான் சார்ந்து இருக்கும் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் அதற்கு உண்டான நல்ல தீர்வினை உணர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
5. தொழிலாளர்களிடத்தில் பேசி தொழிற்சங்கத்தின் நிதி நிலையை உயர்த்தும் திறனுடையவராக இருத்தல் வேண்டும்
6. தொழிலாளர்களுக்கு திடீரென ஏற்படும் பிரச்சனைகளின் போது உடனடியாக களத்திற்கு சென்று தொழிலாளர்களுக்கு தைரியத்தையும் ஊக்கத்தையும் வழங்கக் கூடியவராக இருக்க வேண்டும்.
7. தேவை ஏற்படின் தொழிலாளர்களுக்காக நிர்வாகத்தை எதிர்த்து ஒலி முழக்கம், வாயிற்கூட்டம், வேலை நிறுத்தம் ஆகியவற்றை முன் நின்று செய்ய திறமையுள்ளவராக இருக்க வேண்டும்.
8. பொதுவான கோரிக்கைகளை வென்றெடுக்க மற்ற தொழிற்சங்கங்களுடன் கூட்டு குழு ஏற்படுத்தி போராட்டங்களை முன்னெடுக்க அறிந்து வைத்திருக்க வேண்டும்.
9. தான் பணிபுரியும் நிறுவனத்தின் உற்பத்தி, இலாபம், நஷ்டம் போன்றவற்றின் தரவுகள் சமகால அரசுகளின் பொருளாதாரக் கொள்கைகள், வரி விதிப்பு போன்றவற்றோடு கல்வி, தொழில் நுட்பம், நிதி மேலாண்மை, தொழிலாளர் சட்டம் ஆகியவற்றில் ஆழ்ந்தஅறிவு மற்றும் புரிதல் பெற்றிருக்க வேண்டும்.
10. நிர்வாகத்துடன் ஏற்படும் கோரிக்கை, ஒப்பந்தம் பற்றிய பேச்சு வார்த்தையில் தொழிலாளர் நலன் சார்ந்து இன்றை நிலை எதிர்கால தேவை ஆகியவற்றில் போதிய புரிதலுடன் கூடிய பேரம் பேசும் திறமை பெற்றிருக்க வேண்டும்.
11. தொழிற்சங்கத் தலைவர்கள் சட்டப்படி தொழிலாளர்கள் நலனை எப்படி முன்னேற்றுவது என்பதை அறிந்திருக்க வேண்டும். அரசாங்கமோ முதலாளிகளோ தொழிலாளர்களின் உரிமைகளை ஏற்கவில்லை என்றால் அதை அவர்கள் எதிர்க்க வேண்டும்.
12. ஒரு தொழிற்சங்கத்தின் பலம் அதன் பேர சக்தயில் இருக்கின்றதே ஒழிய அதன் எண்ணிக்கையில் மட்டும் அல்ல. இந்த சக்தி நல்ல அமைப்பு, சிறந்த தலைவர்கள், போதிய நிதி இவைகளில் இருந்து வருகின்றது. தொழிற்சங்க தலைவர் உண்மையாகவும் பொறுமையாகவும், தைரியமாகவும், இருக்க வேண்டும்.



tnebes.org

**தொழிற்சங்கப் பத்திரிகைகள்:**

தொழிலாளர்கள் நலனைப் பெருக்கத் தொழிற்சங்கத் தலைவர்கள் பத்திரிக்கைளை வெளியிட வேண்டும். பழைய காலத்தில் வாரத்திற்கு ஒருமுறை, இரண்டு வாரத்திற்கு ஒருமுறை மாதத்திற்கு ஒருமுறை பத்திரிகைகள் வெளிவந்தன. தற்பொழுது பெரும்பாலும் மாதத்திற்கு ஒருமுறை வெளிவருகின்றன.

எந்த பத்திரிக்கை தொடங்கினாலும் அது எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக்சுகூடியதாக இருக்க வேண்டும். தொழிலாளர்களைப்பற்றிய விஷயங்களை வெளியிட்டு அவர்கள் அறிவைப் பெருக்க வேண்டும். அவ்வாறான பத்திரிகைகள் தொழிற்சங்க இயக்கம் வளர்வதற்கு உறுதுணைாக அமையும்.

**தொழில் தகராறுகள்:**

நிறுவனங்களின் நிர்வாகத்திற்கும் பணியாளர்களுக்கும் இடையேயான நலன் முரண்பட்டவையாக இருந்தால் தகராறுகள் ஏற்படுகின்றன. அவ்வாறான தொழில் தகராறுகள் அல்லது அமைதியின்மை நவீன தொழில்யுகத்தில் நன்கு வேரூன்றியுள்ளது. இக்கால தொழில் முறையில் அவை உண்மையிலேயே ஓர் அங்கமாக இருக்கிறது. நிர்வாகத்திற்கும் பணியாளருக்குமிடையே ஒருமித்த கருத்து என்பது இனிமேல் அடைய வேண்டிய மிகச்சிறந்த நோக்கமாகும்.

தொழில் அமைதியின்மை ஓர் ஒருமுகப்படுத்தப்பட்ட வடிவத்தை அடையும் பொழுது ஆர்ப்பாட்டங்கள், முற்றுகைகள் மறியல்கள், கதவடைப்புகள் வேலை நிறுத்தங்கள் என்று பல வடிவங்களில் அழைக்கப்படுகின்றன.

**வேலை நிறுத்தங்கள்:** தொழிற்சங்கங்களிடத்துள்ள மிகவும் சக்தி வாய்ந்த (Very Powerful tool) ஒரு சாதனமாக வேலை நிறுத்தங்கள் பொதுவாக கருதப்படுகின்றன. வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப் பணியான்மையர் ஏற்றுக் கொள்வதற்காக அவர்கள் மீது நெருக்கத்தினைக் கொண்டு வரும் நோக்கத்திற்காகப் பணியாளர்களின் ஒரு பகுதியினர் அல்லது அனைவரும் பணியிலிருந்து வெளியே இருப்பதற்கான ஒரு நடவடிக்கையாகும். பொருளாதார வேலை நிறுத்தத்தில் அதிகப்படியான கூலிகள், அகவிலைப்படிகள், மேலுதியம், வேலைகளுக்கு வரம்புகள் அல்லது பிறவசதிகளுக்கான வேலை நிறுத்தம் பொருளாதார வேலை நிறுத்தமாகும் (Economic Strike)

பிற தொழில் நிறுவனங்களில் ஏற்படுகின்ற தொழிலாளர் வேலை நிறுத்தங்களுக்கு ஆதரவாக நடத்துகின்ற வேலை நிறுத்தங்கள் “ பரிவு வேலை நிறுத்தங்கள்” (Sympathetic strikes)

ஒரு தொழிற்சாலை அல்லது ஒரு பகுதியிலுள்ள பெரும்பாலான அல்லது எல்லாத் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களால் நடத்தப்படுகின்ற ஒரு வேலை நிறுத்தம் 'பொது வேலை நிறுத்தம் (General Strike) என்று கூறப்படுகின்றது. உள்ளமர்வு வேலை நிறுத்தம் (Sit down strike) என்பதில் பணியாளர்கள் பணிபுரியாமலிருப்பார்கள். ஆனால் அவர்கள் பணியிடங்களைவிட்டு அகலாமலிருப்பார்கள் அவர்கள் பணியிடங்களில் இருப்பது மட்டுமல்லாமல் உற்பத்திச் சாதனங்களின் மீது அவர்களின் கட்டுப்பாட்டினையும் நிலைபெறச் செய்கின்றார்கள் இது 'உள்ளிருப்பு வேலை நிறுத்தம்' (Stay in strike) கைத்துணைப் பொறிகளைக் கீழே வைத்து வேலை நிறுத்தம்' (tools down strike) ' எழுது கோலைக் கீழே வைத்து வேலை நிறுத்தம்' (pen down movement) என்றும் அழைக்கப்படுகிறது.



tnebes.org

'வேலையைத்தாமதாகச் செய்யும் வேலை நிறுத்தம் (slow down movement) என்பது வேலைநிறுத்தம் என்ற சொல்லின் இயல்பான தன்மையில் அது ஒரு வேலை நிறுத்தமாகாது பணியாளர்கள் பணிகளில் இருப்பார்கள் அவர்கள் பணிபுரியாமல் இருக்கமாட்டார்கள் ஆனால் அவர்கள் ஓர் ஒழுங்கு அமையப்பெற்ற, வேண்டுமென்ற முறையில் பேரளவில் உற்பத்தி விகிதத்தினை வரையறை செய்வார்கள். இது வேண்டுமென்றே முயற்சி விளைவைக் கட்டுப்படுத்திக் குறைக்கும் இயக்கம் (go slow movement) என்று அழைக்கப்படுகின்றது.

__முற்றுகை (Gherao):__ சமீப காலங்களில் இந்தியாவில் தொழில் அமைதியின்மை 'முற்றுகை' என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. முற்றுகை என்பதற்கு சூழ்ந்து கொள்வது என்பது பொருளாகும். முற்றுகை என்பது பணியாளர்களினுடைய ஒரு பிரிவினரால் எடுக்கப்பட்ட ஒரு கூட்டு செயல் நடவடிக்கையாகும். அதில் நிறுவனத்தின் தலைவர் அல்லது நிர்வாகத்தின் உயரிய அதிகாரிகள் தொழில் சாலைகளிலிருந்து அல்லது அவர்களின் உறைவிடங்களில் இருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்படாமல் தடை செய்யப்படுவார்கள் சில நேரங்களில் உணவு அல்லது குடிநீர் இன்றி கூட இருக்க வேண்டியிருக்கும்.

__தொழிலாளர்களால் நடத்தப்படுகின்ற முற்றுகைக்கான காரணங்கள்:__

1. நீதி மன்றங்கள், தீர்பாயங்கள் (Tribunals) கூலி குழுக்களின் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தாமை 2) ஒப்பந்த பணி மற்றும் தற்காலிக பணிகளை நிரந்தரமாக்க கோருதல் 3) பணியாளர் குறைப்பும் தற்காலிக வேலை நிறுத்தமும் 4) தொழிற்சங்கத்தினை அங்கீகரித்தல் 5) குற்றச்சாட்டு, தற்காலிக வேலை நீக்கம், வேலையிலிருந்து விலக்கம் அல்லது நீக்குதல் 6) அதிக கூலிகள் 7) கூடுதலான அகவிலைப்படி 8) இடைக்கால நிவாரணம் 9) கூலி நிலுவைகள் 10) மேலுதியம்.

__கதவடைப்புகள் (Lock outs):__

வேலை நிறுத்தம் என்பது பணியாளர்களிடத்திலுள்ள ஓர் ஆயுதத்தை போல கதவடைப்பு என்பது நிர்வாகத்திடம் உள்ள ஓர் ஆயுதமாகும். கதவடைப்புகள் வேலை நிறுத்தங்களுக்கு முற்றிலும் எதிரானவையாகும் பணியாளர்களை பணிய வைப்பதற்காக இவை பணியாண்மையர்களால் தொடங்கப்படுகின்றன. பணியாண்மையர்களால் திட்ட வரை செய்யப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீது பணியாளர்கள் மறுபடியும் பணிபுரிய ஏற்றுக்கொள்ளும் வரையில் தொழில் நிறுவனங்களைப் பணியாண்மையர் மூடுவதற்காக செய்யப்படுகின்ற நடவடிக்கைகளே கதவடைப்புகளாகும்.

__தொழில் தகராறுகளைத் தடுத்து நிறுத்துதல்:__

தொழில் தகராறுகளுக்கான காரணங்களை அறிந்து அவற்றைத் தடுப்பதற்கும் அவற்றை விரைவில் தீர்ப்பதற்குமான ஒரு வழிமுறையினை உருவாக்குவதற்கும் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்

1) வலிமையான தொழிற்சங்கங்கள் (Trade unions), 2) பணிக்குழுக்கள் (Works committees) 3) நிலை ஆணைகள் (Standing orders) 4) குறைகளை தீர்ப்பதற்கான நடைமுறைகள் (Grievance procedures) 5) பொது நல அதிகாரிகள் (Welfare officers) 6) நிர்வாகத்தில் பணியாளர் பங்கு (worker's participation in managements)



tnebes.org

**தொழிற்சங்கங்கள் :** ஒவ்வொரு தனிப்பட்ட தொழிலாளரையும் நம்பவைப்பது, இணங்கச் செய்வது மற்றும் செயலாட்சிக் குழுவனரின் கருத்திற்கு இணக்குவித்து மாற்றுவது என்பது நிர்வாகத்திற்கு கடினமாகும். ஒருங்கிணைக்கப்பட்ட பணியாளர் வர்க்கத்தின் உயிர் நாடியகச் செயல் படுகின்ற தொழிற்சங்கங்களை இணங்கச் செய்தால் அதுவே ஒவ்வொரு தொழிலாளரையும் நிர்வாகத்தின் கருத்துக்கு இணங்கச் செய்வதற்குச்சமமாகும்.

கலந்துரையாடல்களின் பொழுது பணியாளர்களின் நலன்கள் அவர்களுடைய தொழிற்சங்கங்களால் எடுத்துரைக்கப்படும் பொழுது தொழிலாளர்களுடைய கூட்டு பேரம் பேசுகின்றசக்தி பண்மடங்காகிறது.

நிறுவனத்திற்கும் பணியாளர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தங்களை மிக எளிதில் நிர்வாகமோ பணியாளர்களோ புறக்கணிக்கமுடியாது.

**<u>கூட்டுப் பேரம் பேசுதல்: (Collection bargaining)</u>** தொழிற்சங்கங்கள் அவற்றினுடைய நோக்கங்களை அடைவதற்காகப் பயன்படுத்துகின்ற முறைகளில் ஒன்றுதான் கூட்டுப் பேரம் பேசுதல் இம்முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை மேற்கத்திய நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இக்கோட்பாட்டினை வெப்ஸ் (Vebbs) என்பவர் அறிமுகப்படுத்தினார். ' கூட்டுப்பேரம் பேசுதல் என்பது ஒழுங்கமைப்பு பெற்ற தொழிலாளர் அணியின் சார்பாளர்களுக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களுக்குமிடையே வேலைகட்டு வரம்புகளை (Condition of work) ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகத் தீர்மானிப்பதற்கான ஒரு செயல் முறையாகும்' என்று பணியாளர் மேலாண்மையும் தொழில் உறவுகளும் என்னும் நூலில் டேல் யோடர் ( Dale yader) விளக்குகிறார்.

இது பணியினைப் பற்றிய நிபந்தனைகளையும் வரையறைகளையும் குறித்து ஒரு குறிப்பிட்ட எல்லை அல்லது தொழில் நிறுவனத்திலுள்ள தொழிற்சங்கங்களுடன் எழுத்து வடிவிலோ அல்லது எழுத்து வடிவில்லாமலோ ஏற்படுத்திக்கொள்கின்ற ஒப்பந்தத்தின் விளக்கங்களைப் குறிக்கின்றது.

**கீழ்காணும் நோக்கங்களுக்குக் கூட்டு பேரம் பேசுதல் கடைபிடிக்கப்படுகிறது:**

1) கூலிகள் 2) அலுவலக நேரம் 3) மிகை நேரக் கூலி வீதங்கள் 4) தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்திற்கான இழப்பீடு 5) விடுப்பு விதிமுறைகள் 6) தொழிற்சங்கம் அதனுடைய உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் மதிப்பு நிலை 7) தற்காலிக வேலை நீக்கம், பணியாளர் குறைப்பு மற்றும் பணியாளர் வெளியேற்றம் 8) இலாபங்களின் மீதான மேலுதியம் 9) நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைப் தீர்ப்பதற்கான செயல்முறை.

**<u>நிலை ஆணைகள் : (Standing orders)</u>** நிலை ஆணைகள் என்பது பணியாளர்களது வேலைகளுக்கு வரம்புகளைப்பற்றிய விதிகளையும் ஒழுங்குமுறை விதிகளையும் குறிக்கின்றது. இவை நிர்வாகத்தால் தங்கள் விருப்பமாகவோ சட்ட விதிமுறைகளின்படியோ தொகுக்கப்படுகின்றன. பணியாளர்களை வேலைக்கு தேர்ந்தெடுத்தல், பணியிலிருந்து நீக்குதல், ஒழுங்கு நடவடிக்கை. விதிமுறைகள் விடுப்பு போன்ற வேலைகளுக்கு வரம்புகளைப்பற்றிப் பணியாளர் மற்றும் பணியாண்மையரது உரிமைகளையும் கடமைகளையும் தெளிவாகவும் சுருக்கமாகவும் நிலை ஆணைகள் விளக்குகின்றன.



tnebes.org

பணிபற்றி நன்கு விளக்கப்பட்ட விதிகளும் நிபந்தனைகளும் இல்லாமையால்தான் பணியாளருக்கும் பணியாண்மையருக்குமிடையே பெரும்பாலான மோதல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. எனவே தொழில் தகராறுகளைத் தடுப்பதில் நிலை ஆணைகள் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

<u>ஒழுங்குமுறை பற்றிய விதித்தொகுப்புகள் (Code of discipline):</u> தொழிலாளர்களும் பணியாண்மையரும் உடனமர்ந்து அவர்களுக்கு பொருந்தக்கூடிய ஒழுங்குமுறைபற்றிய விதிமுறைகளைத் தீர்மானிக்க வேண்டும். அதன் பயனாக அவர்கள் உடனான கலந்துரையாடல்கள் இசைவிளக்கம், தன் விருப்பம் சார்ந்த நடுவர் முடிவுகளின் மூலம் அவர்களுடைய குறைகளை நீக்கிக் கொள்ளலாம், அவ்வாறான விதித் தொகுப்புகள் இந்திய தொழிலாளர் மாநாட்டின் பதினைந்தாவது கூட்டத்தில் உருவாக்கப்பட்டன.

<u>ஒழுங்குமுறை பற்றிய விதித்தொகுப்புகளின் முக்கியமான விவரங்கள் :</u> 1) அறிவிப்பின்றி வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்புச் செய்யக்கூடாது 2) தொழில் துறைசார்ந்த எந்த காரியத்திலும் ஒரு தலை பட்சமான நடவடிக்கை எடுக்கக் கூடாது 3) உற்பத்தியை கட்டுப்படுத்திக் குறைக்கும் கோட்பாட்டினை மேற்கொள்ளக்கூடாது 4) நிறுவனத்தின் இயந்திரங்கள் மற்றும் சொத்துக்களை வேண்டு மென்றே சேதம் விளைவிக்க கூடாது 5) வன்முறைக்கிளர்ச்சி, அச்சுறுத்தல் வலுக்கட்டாயம் அல்லது தூண்டுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடாது 6) தீர்ப்புகளையும் ஒப்பந்தங்களையும் விரைவாகச் செயல்படுத்த வேண்டும் 7) சுமுகமான தொழில் உறவுகளைப் பாதிக்கின்ற எந்த விதமாக நடவடிக்கையினையும் தவிர்க்கவேண்டும்.

தொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்தல் (Settlement of disputes) தொழில் தகராறுகளைக் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகள் தோல்வி அடைந்து தொழில் தகராறுகள் மறுபடியும் ஏற்பட்டால் கூடிய விரைவில் தீர்த்துவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் இதுவரையில் தோற்றுவிக்கப்பட்ட முறைகளில் இரண்டு முறைகள் தாம் மிகவும் வழக்கத்தில் உள்ளவை ஆகும். அவையாவன (1) இசைவு இணக்கம் (Conciliation) (2) நடுவர் தீர்ப்பு (Arbitration)

<u>**இசைவிணக்கம் :**</u> தொழில் தகராறுகளை தீர்ப்பதில் இது மிகவும் முக்கியமான திறமையான முறையாகும். இம்முறையில் தொழில் தகராறுகளில் சம்பந்தப்பட்டுள்ள இருதரப்பினர்களிடையே உடனடியான இசைவிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியினை ஒரு நடுநிலையாளர் மேற்கொள்கிறார் அவர்களது குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் கண்டறிகின்றார்.

<u>நடுவர் தீர்ப்பு:</u> தொழில் தகராறுகளில் சம்பந்தப்பட்டுள்ள இருதரப்பினர்களிடையே இசைவிணக்கம் செய்வது தோல்வி அடைந்தால் தான் நடுவர் தீர்ப்பு மூலம் தகராறுகளைத் தீர்த்து வைத்தல் பயன்படுத்தப்படுகிறது, இம்முறையில் நடுவர் நியமனம் செய்யப்பட்டு அவர் இரு தரப்பினர்களது கருத்துக்களையும் அறிந்து தகராறின் முடிவுக்கு கொண்டு வருகிறார் பொதுவாக அவர் ஒரு நீதிபதியைப் போல் செயல்படுகிறார்.



tnebes.org

தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்காகக் கீழ்வரும் அமைப்புகள் தொழில் தகராறுகள் சட்டப்படி அமைக்கப்பட்டுள்ளன.

1. இசைவிணக்க அலுவலர் (conciliation officer) 2) இசைவினைக்க குழு (Board of conciliation ) 3) விசாரனை நீதிமன்றம் (Court of enquiry) 4) தொழிலாளர் நீதி மன்றங்கள் (Labour courts) 5) தொழில் துறை தீர்ப்பாயங்கள் (Industrial tribunals) 6)தேசிய தீர்ப்பாயங்கள் (National tribunals)

**தொழிலாளர் நீதி மன்றங்கள் (Labour Court):** தொழில் தகராறுகளுக்கு தீர்ப்பு அளிப்பதற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட அரசினால் நியமிக்கப்படுகின்றன.

**தொழில் துறையின் தீர்ப்பாயங்கள் :** தொழில் தகராறுகளை முடிவுக்கு கொண்டுவருதற்கு சம்பந்தப்பட்ட அரசு அரசிதழில் தெரிவிப்பதன் வாயிலாக தொழில் துறைத் தீர்ப்பாயங்களை நியமிக்கலாம். அவ்வாறான தொழில் தகராறுகள் சட்டத்தின் இரண்டாவது அல்லது முன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தச் செயலுடனும் தொடர்புள்ளவையாக இருக்க வேண்டும்.

**தேசியத் தீர்ப்பாயங்கள் :** தேசிய தீர்ப்பாயங்கள் மத்திய அரசினால் அமைக்கப்படுகின்றன. அவற்றை நிறுவியதைப்பற்றி அரசிதழில் வெளியிடப்படும். தொழில் தகராறுகள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தால் அல்லது தொழில் தகராறுகள் பிற மாநிலங்களிலுள்ள தொழில் நிறுவனங்களையும் பாதிக்கக்கூடிய நிலையில் இருந்தால் அவற்றை தீர்ப்பு முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்ப்பட்ட தேசிய தீர்ப்பாய்ஙகள் அமைக்கப்படுகின்றன.

தொழிலாளர் சட்டங்களின் மேம்பாடு 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நமது நாட்டில் அவசர நிலைப் பிரகடனம் (Emergency Act) செய்யப்பட்ட பின்னர் தொழில் சட்டங்களின் பயனுறுதியினை மேம்படுத்துவதற்கும் தொழிலாளர் சமுகாயத்தின் மிகப்பெரும்பாலோருக்கு நன்மைகளை அளிப்பதற்காகவும் தற்போதுள்ள சட்டங்களில் திருத்தங்கள் செய்தல், புதிய சட்டங்களை இயற்றுதல் ஆகியவற்றை உள்ளிட்ட பல சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன தேவையானவை என்று கருதப்படுகின்ற இடங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

தொழில் நிறுவனங்கள் தடையில்லாமல் செயற்படுவதை உறுதிப்படுத்ததுவதற்காகத் தொழில் தகராறுகள் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. அத்திருத்தச் சட்டப்படி. 300 அல்லது அதற்கு அதிகமான பணியாளர்களை கொண்டுள்ள தொழிற்சாலைகள் எந்த விதமான மூடுதல், தற்காலிக வேலை நீக்கம் அல்லது பணியாளர் குறைப்பினை மேற்கொள்வதற்கு முன்பு முன் அனுமதி பெறவேண்டும்.

பல தொழில் நிறுவனங்களில் ஏற்கனவே நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது தொழிலாளர் துறை (workers sector) என்ற மற்றொரு புதிய திட்டத்தினை உருவாக்குவதற்கு ஒரு சிறப்பு கடமைப் படை (task force)



tnebes.org

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை எல்லாம் தொழில் தகராறுகளைத் தவிர்த்துத் தொழில் உறவுகளை வளர்ப்பதற்கு உறுதியாக உதவிபுரிகின்றன.

நோயினைக் குணப்படுத்துவதைக் காட்டிலும் வராமல் தடுத்து நிறுத்துவது சாலச்சிறந்ததாகும் என்ற பழமொழி தொழில் தகராறுக்கும் பொருந்துகிறது. தொழில் தகராறுகள் என்பது ஒரு நோயின் அடையாளங்களாகும். அவற்றை ஒடுக்குதலைக் காட்டிலும் அவற்றை வராமல் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் அரசாங்கமோ முதலாளிகளோ முயற்சிகள் செய்ய வேண்டும்.

இது தொழில் அமைதியையும், நல்லுறவையும், பாதுகாப்பையும், உறுதிப்படுத்தும். இதனால் உற்பத்தியையும் இலாபத்தினையும் பெருக்க வழிவகை செய்யும்.

**R.சந்தோஷ் குமார், ME, MCA, MBA.**
வெளியீட்டு செயலாளர் / மின்அலை

**கேள்வி – பதில்**

ரிசர்வ் வங்கியின் (Reserve Bank) வேலை என்ன?
நம் நாட்டிலுள்ள எல்லா அரசுடமை வங்கிகளையும் தனியார் வங்கிகளையும் தனி கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஓர் அதிகாரம் மிக்க மைய வங்கிக்கு தான் ரிசர்வ் வங்கி (Reserve Bank) என்று பெயர்.

இந்த ரிசர்வ் வங்கி நாட்டின் பொருளாதாரத்தையும் விலைவாசியையும் உன்னிப்பாக கவனித்து, நிலைமைக்கு ஏற்றப்படி முக்கியமான முடிவுகளை எடுக்கும். முதலில் மும்பையில் மட்டுமே இருந்து செயல்பட்ட இந்த ரிசர்வ் வங்கி பின் நாட்களில் தில்லியிலும், சென்னையிலும் கிளைகளை நிறுவியது. இன்றைய தேதிகளில், நம் நாட்டில் உள்ள எல்லா வங்கிகளும் தங்களிடம் உள்ள பண இருப்பிலிருந்து 21.5 சதவீதம் (Statutory Liquidity Ratio (SLR) ஆகவும், 3 சதவீதம் ரொக்க இருப்பு விகிதமாக (Cash Reserve Ratio - (RR) ரிசர்வ் வங்கிக்கு செலுத்தி விட வேண்டும். நாட்டின் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப இந்த SLR சதவீதம் CRR சதவீதமும் மாறிக்கொண்டே இருக்கும்.

ரிசர்வ் வங்கி பெற்ற அந்தப் பணத்தை தேவையான அரசுத்திட்டங்களுக்கு கடனாகக் கொடுக்கும் அது மட்டுமல்லாமல், பணம் தேவைப்படும் வங்கிகளுக்கும் கடன் கொடுக்கும். அவைகளிடமிருந்து கடனும் வாங்கும். ரிசர்வ் வங்கி வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய காலக் கடன்களுக்கு விதிக்கும் வட்டி விகிதமே ரெப்கோ ரேட் (Repo Rate) ஆகும். நாம் வங்கியிடம் வைப்பு நிதி செலுத்துவது போல், வங்கிகளும் தங்கிடமுள்ள அளவுக்கு அதிகமான பணத்தை ரிசர்வ் வங்கியிடம் குறிப்பிட்ட காலத்திற்கு வைப்புத் தொகையாக வைக்கும். இந்த வைப்புத் தொகைக்கு ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு கொடுக்கும் வட்டி விகிதமே ரிவர்ஸ் ரெப்கோ ரேட் (Reverse Repo Rate) ஆகும். ரிசர்வ் வங்கியை நிர்வாகம் செய்ய ஒரு கவர்னரும், நான்கு துணை கவர்னர்களும் இருப்பார்கள்.

கரன்ஸி நோட்டுகளை அச்சடிக்கும் உரிமை அரசாங்கத்திற்கு கிடையாது. அதன் முழு அதிகாரமும் ரிசர்வ் வங்கியிடம் தான் இருக்கும். 2000, 500, 200, 100, 50, 20, 10, 5 நோட்டுகளை ரிசர்வ் வங்கி அச்சடித்து வெளியிடும். மத்திய நிதி அமைச்சகத்துக்கு ஒரு ரூபாய் நோட்டுகளையும், சில்லரை நாணயங்களையும் மட்டுமே அச்சடிக்கும் உரிமை உண்டு ஆனால் தற்பொழுது இவைகுள் அச்சிடுவது குறைகிறது.



tnebes.org

## மின் பாதை

**மின் பாதைகளில் அதிக பளு**

ஒவ்வொரு ஆண்டும் ஒருங்கிணைக்கும் மின் மாற்றிகள், (Inter Connecting Transformens), தமிழ் நாட்டுக்குள் உள்ள மின்பாதைகள் திறனுக்கு அதிகமான மின்பளுவுக்கு (Severe Loading) உள்ளாக்கப் படுவதாக, தென்மண்டல மின் ஒழுங்கு முறை மையம் (Southern Regional Load Despatch Centre) கூறியுள்ளது. எதிர் காலங்களில் ஏற்றபடும் மின் கட்டமைப்பையும் வலுப்படுத்த வேண்டுமென தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகத்தை அந்த அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

உயர் மட்ட (Peak) மின்தேவை காலங்களில் சென்னை. நெய்வேலி. புகளூர், திருச்சி, ஈரோடு பகுதிகளில் உள்ள மின்பாதைகள் திறனுக்கு அதிகமான மின்பளுவுக்கு உள்ளாகின்றன, 2021 & 22 ம் ஆண்டில், ஏப்ரல் 2019, மார்ச் 2022 காலத்தில் சுமார் 20 முறை மின்தடைகள் ஏற்பட்டுள்ளன. 2021–22ம் ஆண்டில் ஆறு முறை மின் தடை ஏற்பட்டதன் விளைவாக. சுமார் 1746 மெ,வா, மின்சக்தி, மின் பாதை பழுதால் விநியோகிக்கப்பட முடியவில்லை. மின் பாதைகள் திறன் அதிகரிக்கப்படும், அவைகளை செயல் பாட்டுக்கு கொண்டு வருவதும், மின் பளு உயர்வுக்கு ஏற்ப செய்யப் படவில்லை. தமிழ் நாட்டின் மின் பாதைகளில் ஏற்படும் இதுபோன்ற மின் தடைகளினால், தொடர் மின் தடைகள் ஏற்பட்டு, நாடு முழுவதும் மின் கட்டமைப்பு பாதிக்கக் கூடிய ஆபத்து இருக்கிறது, பருவ காற்று காலங்களில், கோவை, திருநெல்வேலி, கயத்தாறு ஆகிய பகுதிகளில் உள்ள மின்பாதைகள் அதிக மின்பளுவிக்கு உள்ளக்கப்படுகின்றன. 19வது மின்சக்தி தேவை ஆய்வறிக்கையின் படி, 2026–27ம் ஆண்டுகிளல், தமிழ்நாட்டின் மின்தேவை 27000 மெ.வா. ஆக இருக்கும். சுமார் 18,000 மெ.வா மின் சக்தி வெளி மாநிலங்களில் இருந்து வாங்க வேண்டியிருக்கும். நீண்ட கால ஒப்பந்தங்களின் மூலம் வாங்கும் மின்சக்தி ஆகியவைகள் அனைத்தையும் கொண்டு செல்ல மின்பாதை திறன் போதுமானதாக இருக்காது. மின்தடைகள் ஏற்படும் வாய்ப்புகள் உண்டாகும். இதனால் மின்பாதைகள் திறனையும், கட்டமைப்பையும் உடனடியாக உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென அந்த அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. 2022ம் ஆண்டு ஏப்ரல் 29ம் தேதியன்று, உயர்ந்த பட்சமின்தேவை 17563 மெ.வா. ஆகவிருந்தது, தமிழ் நாடு மின் உற்பத்திக்கழகத்தின் கணக்கீட்டின்படி, 2026–27ம் ஆண்டுகளில் மின்தேவை 27000 மெ.வா. ஆக இருக்கும் 15000–18000 மெ.வா. மின்சக்தி வெளியில் இருந்து வாங்க வேண்டியிருக்கும். இதற்கேற்ப, மாநிலத்துக்குள்ளே உள்ள மின்பாதைகளின் திறன் உயர்த்தப்பட வேண்டும். வெளி மாநிலங்களில் குறைவான விலையில் மின்சக்தி கிடைக்கும் போது, மின் பாதைகளின் திறன் குறைவு காரணமாக, அந்த சக்தியை வாங்க இயலாமல் போகும் நிலை ஏற்படக் கூடாது என் அதன் மண்ட மின்சக்தி ஒழுங்கு முறை மையம் (SRLDC) கூறியுள்ளது.

**......THE HINDU**

**விவசாய மின் இணைப்புகளுக்கு தனி மின்பாதை**

தமிழ் மின் உற்பத்தி மற்றும் விநியோக்கழகம் 2000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விவசாய மின் இணைப்புகளுக்காக, தனியாக மின் பாதைகளை அமைக்க திட்டமிட்டுள்ளது. மத்திய அரசின் இந்தத் திட்டத்திற்கு கிராமப்புற மின் சக்தி நிறுவனமும், மின்சக்தி நிதி நிறுவனமும் கடன் உதவி அளிக்கும். 2027ம் ஆண்டிற்குள், இந்த திட்டம் நிறைவு பெறுமானால், கடன் தொகையில் 60% உதவியாக வழங்கப்படும். 2027ம் ஆண்டுக்குள் திட்டம் நிறைவடையாவிட்டால் தமிழ்நாடு மின் உற்பத்திக்கழகம் முழுத்தொகையையும் வட்டியுடன் செலுத்த வேண்டும். தற்போது வீட்டுப் பயனாளிகளுக்கும் விவசாய மின் இணைப்புகளுக்கும் ஒரே மின் பாதையில் மின்சக்தி



tnebes.org

வழங்கப்படுகிறது. இதனால் மின் மாற்றிகளில் அதிகப்பளு, மின்தடை, மின்சக்தி இழப்பு ஆகியவை ஏற்படுகின்றன. துணை மின் நிலையங்களில் இருந்து, தனியாக மின்பாதைகள் அமைக்க திட்டமிட்டுள்ளதாக மின் கழகம் கூறியுள்ளது. இதனால் மின்தடை, நிதி இழப்பு, மின் திருட்டு ஆகியவை பெருமளவில் குறையுமென அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார், தற்போது விவாசய மின் இணைப்புகளுக்கு பயன்படுத்தப்படும் மின்சக்தி குறித்து கணக்கிடப்படுவதில்லை.

**---- ETENERGY WORLD**

**வடசென்னை அனல் மின்திட்டம்–3ம் கட்டப்பணிகள்**

வடசென்னை அனல் மின்திட்டத்தின் 3ம் கட்டப்பணிகள் இந்த ஆண்டு இறுதியில் நிறைவடைந்து மின உற்பத்தி துவங்கும் என தமிழ்நாடு மின் துறை அமைச்சர் கூறியுள்ளார். 8723 கோடி ரூபாய் செலவும் உருவாகி வரும் இந்தத்திட்டதில் 83% பணிகள் நிறைவடைந்து விட்டன, மீதமுள்ள பணிகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடைந்து விடும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். தற்போது 5 மின் பிரிவுகளில் / 83.0 மெ.வா. மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது, 3ம் கட்டப்பணிகள் நிறைவடையும் போது, வடசென்னை அனல் மின் திட்டதின் நிறுவு திறன் 2630மெ.வா ஆக உயரும் 2025ம் ஆண்டுக்குள், உற்பத்தித்திறனை 6500 மெ.வா. உயர்த்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. சென்ற ஆண்டுகளில் 14500 மெ.வா. ஆக இருந்து மின்தேவை சென்ற ஆண்டு 16500 மெ.வா. ஆக உயர்ந்துள்ளது உச்ச கட்ட தேவை 17587 மெ.வா. ஆக இருந்த போதிலும், மின்தடை ஏதுமின்றி மின்சக்தி அளிக்கப்பட்டுள்ளது. சென்னையில் மட்டும் மின்தேவை 700 மெ.வா. அதிகரித்துள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

**மின்சார சட்டத்திருத்தும்**

தொலைத் தொடர்பு துறையில் உள்ளது போன்று ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களிலிருந்து ஒரு நிறுவனத்தை தேர்வு செய்வது போன்று, மின் பயனீட்டாளர்களும் தேர்வு செய்யும் வகையில் பல மின்விநியோக நிறுவனங்களை ஒரே பகுதியில் அறிமுகம் செய்யும் வகையில் மின்சாரச்சட்டம் திருத்தப்படும். இதற்கான முன்வரைவு, எதிர்வரும் நாடாளுமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப் படுமென மின்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

**சென்னையில் மின்சக்தி பயன்பாடு**

இந்த ஆண்டு கோடை காலத்தில், தமிழ்நாட்டின் மொத்த மின் தேவையில் 25% சென்னை நகரத்தின் பயன்பாடு. இந்த ஆண்டு மேமாதம் அதிகபட்மாக 3716 மெ.வா. பதிவாகியுள்ளது, யூனிட் மின் சக்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. 2022ம் ஆண்டில் சென்னை நகரத்தின் மின்தேவை 4000 மெ.வா ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| உச்ச கட்ட தேவை | : | 3716 மெ.வா |
| பயன்பாடு | : | 81.33 மில்லியின் யூனிட் |
| சராசரி தேவை | : | 3500–3600 மெ.வா |
| மாநிலத்தின் தினசரி பயன்பாடு | : | 16500 மெ.வா |
| மாநிலத்தின் அதகபட்ச பயன்பாடு | : | 17563 மெ.வா. |
| நாளொன்றிற்கு பயன்பாடு | : | 388 மில்லியன் யூனிட் |

**---- ETENERGY WORLD**

தொகுப்பு : **பொ.S.கண்ணன்**

முன்னால் மாநில துணைத்தலைவர் / சிவில்



tnebes.org

# வார்த்தைக் கொலைகள்...!?

..முனைவர், சா.சம்பத்

மண்டலச் செயலாளர் / தஞ்சை.

சமீப காலமாக மின் வாரியத்தில் எல்லா மட்டத்திலும் மன அழுத்தம் மிகுதியால் தற்கொலைகள் அல்லது மரணங்கள் நடப்பது அதிகரித்துள்ளதாக பேசப்படுகிறது. தொழிற்சங்கங்களின் போராட்டங்களும் இதை உறுதி செய்கின்றன. இந்த நிலை மிகப்பெரிய விபரீதத்தை நோக்கி நாம் பயணிக்கிறோம் என்பதாகும். முன்பெல்லாம் தற்கொலைகள், மரணங்கள் பணிச் சுமையால் நடந்த நிலை மாறி உயர் அதிகாரிகளின் கடும் சொற்கள் காரணமாக அவமானமடைந்து மனம் வெறுத்து தற்கொலை நோக்கி தள்ளப்படுவது கொலையாகும் (Literally murdered).

வார்த்தைகளின் முக்கியத்துவத்தை ஒருவெண்பாவில்...

‘‘சொல்தான் நினைப்பை செயலாக மாற்றிடும்...

கொல்வது–வெல்வதும் என்றே நடைமுறைய வாழ்வில் சொல்....

எல்லாமும் ஆகுமே நம்பு!

எல்லாமாய் இருந்திடும் நம்பு!

பொருள்:

மனிதன் மனதில் உருவாகும் எண்ணத்தை செயலாக மாற்ற உதவுவது சொல்தான். எண்ணத்துக்கும் செயலுக்கும் இடையில் ஒரு கதவு போல் அது செயல்படுகிறது. ஆனால் வார்த்தைகள் மிகவும் சக்தி உள்ளவை. எனவே அதைக் கவனமாக் கையாள வேண்டும். கவனமில்லாது சொல்லப்படும் கோபமான வார்த்தைகள் அழிவைக்கூட ஏற்படுத்தி விடும். இதையே

தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

‘‘யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்

சோகப்பர் சொல் இழுக்கப்பட்டு’’ என்கிறார்.

ஒரு வார்த்தை வெல்லும் ஒரு வார்த்தை கொல்லும் என்று சொல்வார்கள். மனிதர்களிடையே சண்டையை உண்டாக்குவதும் சொல்தான். சமாதானம் பேசி அதை நிறுத்துவம் சொல்தான். ஒருவரின் பணித்திறமையை மேம்படுத்துவது வார்த்தைகள் தான். அவனின் திறமையை வீணாக்குவதும் ஒரு வார்த்தைதான்.

பொதுவாக மேலதிகாரியின் கோபம் கலந்து மூர்க்கத்தனமாக வார்த்தை என்பது ஒரு வியாதியாகும். அது கோபப்படும் அதிகாரியின் இயலாமை நோயை நினைத்துதான். ‘‘அவருடைய வார்த்தைகள் நான் ஏற்றுக்கொள்ளவில்லை, நான் ஒவ்வொரு நாளும் கடுமையாக உழைக்கிறேன் எனவே அது எனக்கு பொருந்தாது, பாவம் அவருடைய மேல் அதிகாரியின் திட்டை பொறுத்துக்கொண்டு காரணத்தை விளக்க முடியாமல், அதை கீழ் உள்ள அதிகாரி மீது இன்னும் வேகமாக நம் மீது வீசுகிறார்’’ என்ற உண்மையை உணர்ந்து கொண்டால், நமக்கு மன அழுத்தம் வராது. மாறாக அவரின் மீது பரிதாபமே வரும்.



tnebes.org

நன்றாக புரிந்து கொள்ளுங்கள் உங்கள் அனுமதி இல்லாமல் உங்களை யாரும் அவமானப் படுத்த முடியாது (Nobody will hurt you without your permission). தற்போதெல்லாம் நேரிடையாகவோ, Zoom மூலமாகவோ மீட்டிங் என்று அறிவிப்பு வந்த நிமிடத்தில் இருந்து பொறியாளர்கள் பதட்டம் அடைய ஆரம்பித்துவிடுவது கொடுமையின் உச்சம். எவ்வளவு பணி முடித்து இருந்தாலும் திருட்டு வாங்குவது உறுதி என்ற மன நிலையோடு கூட்டததில் கலந்து கொள்ளும் பொறியாளர்கள், வெளியே வரும்போது பலர் வெறுப்பின் உச்சத்தில் நடை தளர்ந்து வெளியே வருவதை பார்க்கிறோம்.

நேர்மறை பேச்சுக்களால் வாரியத்தில் பணியை பெற்ற மனோபாவம் போய், இன்று எதுவும் இல்லாமல் கீழ் அதிகாரிகளை திட்டி வேலை வாங்கிவிடலாம் என்று நினைப்பது அறிவான செயல் இல்லை. மேலும் இது வாரிய நலனையும், பொதுமக்கள் சேவையையும் பாதிக்கும். வாரிய வரலாற்றில் ஒரு மோசமான சரித்திரம் பதிவாகிவிடும்.

இந்த பாவபட்ட சில மனிதர்களை திருந்த நாம் தொடர்ந்து முயற்சிப்போம். முடியாது போனால் அவர்களுக்காக கடவுளிடம் வேண்டுவோம். மாறாக நாம் தவறாக முடிவினை கைவிட்டு இன்னும் தன்னம்பிக்கையுடன் அவமானங்களை புறம் தள்ளி வாரியத்திற்கு உழைப்போம். ஏனெனில் நாம் உண்மையான பொறியாளர்கள். நாம் நம் குடும்பத்திற்கு மிகவும் தேவை....!

---

## பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்.

கீழ்கண்ட பொறியாளர்கள் 30.06.2022 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்.

**Er. K.Ravichandran** JE / FOC / ThiruvarurFormer Secy. / Administration Thiruvarur Branch. ✆: 94432 76244

**Er. V.Govindaraju** EE / MRT / MTPS1 Former President / Mettur MTPS Branch.

✆: 97897 73494

**Er. S.Asokan** AEE / Shift / Piratiyur SSFormer President / Trichy Trichy Branch.

✆: 9443387958

**Er. T.Selvaraju** SE / CDC / TANTRANSCO CDC Branch.

✆: 9445850457

**Er. N.Selvam** EE / O&M / CoonoorNilgiris Branch. ✆: 9443065885

**Er. R.Murugesan** AEE / O&M / PonnamaravathiPudukkottai Branch. ✆: 9442126235

**Er. M.Manimaran** AEE / Town / KaraikudiSivaganga Branch. ✆: 9080274188

**Er. J.Michael Jebaraj** JE1 / EM2 /TTPSTTPS Branch. ✆: 9789184180

**Er. J.Bilavendran** JE / Shift / Kundah PH2Nilgiris Branch. ✆: 9443753396

**Er. G.Kanniapan** JE / Mobile3 / CDCCDC Branch. ✆: 9444946549

**Er. N.Latha** AEE / E / CMP / TTPSTTPS Branch. ✆: 9789338999



tnebes.org

# கண்ணீர் அஞ்சலி

1. 22.6.2022 **பொர். S.இராமனாதன்** முன்னாள் வெளியீட்டுச் செயலாளர் அவர்கள்
2. 24.6.2022 **பொர். கமலக்கண்ணன்,** உதவி பொறியாளர் / து.மி.நி. பராமரிப்பு/ கார்னாம்பட்டு / வேலூர் அவர்கள்
3. 24.6.2022 **பொர்.**M.**சேகர்,** JE-IGr / Shift 110 / 22KVSS / கிருஷ்ணாபுரம், பெரம்பலூர் அவர்கள்
4. 28.6.2022 **பொர். சிவசுப்ரமணியம்,** AEE/ Sipcot SS / மாம்பாக்கம் சென்னை (Rtd) அவர்கள்
5. 2.7.2022 **பொர்.**K.**விஜயசிங் ராஜா,** AEE / Mech / Ph-I வழுதூர் அவர்கள்
6. 6.7.2022 **பொர்** N.**சதீஷ்குமார்,** EE/ O&M / Town/ திண்டிவனம் அவர்கள்.

**மறைவிற்கு பொறியார்கள் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது, பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்களைத் தெரிவித்து கொள்கிறது.**

1. 27.6.2022 **பொர்** D.**சந்திரசேகர்,** கிளை முன்னாள் பொறுப்பாளர் விருதுநகர் அவர்களின் தாயார் அவர்கள்
2. 30.6.2022 **பொர்** S.**துர்கையப்பன்** AE/SS/ பழனி அவர்களின் தந்தையார் அவர்கள்
3. 30.6.2022 **பொர்** B.**சரவணமுத்துகுமார்** JE-I / M/M PM-I TTPS அவர்களின் மனைவியார் அவர்கள்
4. 3.7.2022 **பொர். மதன்,** JE-II / Shift / லஷ்மண்பட்டி S.S. திண்டுக்கல் அவர்களின் தந்தையார் அவர்கள்
5. 6.7.2022 **பொர்** N.**துரைராஜ்,** EE/ obm / Town/ அச்சரபாக்க அவர்களின் தாயர் அவர்கள்
6. 17.7.2022 **பொர்** Y.**சந்திரமோகன்,** TA/ ocf / SS/ சென்னை அவர்களின் தந்தையார் அவர்கள்
7. 19.7.2022 **பொர் மணியரசு,** AE/ தாயனூர் செஞ்சி அவர்களின் மனைவியார் அவர்கள்
8. 6.7.2022 **பொர்.**N.**துரைராஜ்** AEE/O&M/ நகரம் அச்சரபாக்கம் அவர்களின் தாயார் அவர்கள்
9. 17.7.2022 **பொர்.** Y.**சந்திரமோகன்** TA/OCF SS / சென்னை அவர்களின் தாயார் அவர்கள்
10. 21.7.2022 **பொர்.** S.**முருகன்** AE/110/33/11KV SS / தாயனூர் அவர்களின் தாயார் அவர்கள்
11. 01.07.2022 **பொர்.**M.**ஜெய்கிங்ஸ்** JE/CHP2/MTPS/ மேட்டூர் அவர்களின் தாயார் அவர்கள்

**ஆகியோர் இயற்கை எய்தினார்கள், குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்து இரங்களை தெரிவித்துக் கொள்கிறது.**



tnebes.org

# 2022 – ஆம் ஆண்டின் சங்கத்தின் மையப்பொறுப்பாளர்கள்



பொர்.C.சிவசங்கரன்
செயலாளர் / கோவை மண்டலம்
9443003115

பொர்.A.குமரேசன்
செயலாளர் / ஈரோடு மண்டலம்
9976647777





பொர்.G.கதிர்வேல்
செயலாளர் / மதுரை மண்டலம்
7639206686

பொர்.R.முருகன்
செயலாளர் / நெல்லை மண்டலம்
9486338336





பொர்.C.நரசிம்மன்
செயலாளர் / திருச்சி மண்டலம்
8903850694

முனைவர்.S.சம்பத்
செயலாளர் / தஞ்சை மண்டலம்
9443114354





பொர்.K.ஆனந்தபாபு
செயலாளர் / கரூர் மண்டலம்
9750923023

பொர்.V.சுரேந்திரபாபு
செயலாளர் / வேலூர் மண்டலம்
9443627585





பொர்.C.சந்திரசேகரன்
செயலாளர்/திருவண்ணாமலை மண்டலம்
9443803221

பொர்.B.கணேசன்
செயலாளர்/விழுப்புரம் மண்டலம்
9842879143





பொர்.T.சுகுமார்
செயலாளர்/அனல் உற்பத்தி மண்டலம்
9962300507

பொர்.V.விஸ்வநாதன்
செயலாளர்/புனல் உற்பத்தி மண்டலம்
9442608581





பொர்.N.R.செந்தில்
செயலாளர்/காமதேனு நலநிதி
9499014992

பொர்.A.P.ராகேஷ்
பொருளாளர்/காமதேனு நலநிதி
9710328131





tnebes.org





20.07.2022 தலைமைசெயலகத்தில் தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு சார்பாக மாண்மிகு மின்துறை அமைச்சர் **திரு.V.செந்தில்பாலாஜி** அவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டோம்.



Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079. Edited by : R.Santhoshkumar

tnebes.org